Ministry of Education, Higher Education and Vocational Education

| | | |
|---|---|---|
| பொருளியல் I<br>Economics I | கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை - 2025<br>**General Certificate of Education (Adv.Level) Examination 2025**<br>பயிற்சி வினாத்தாள் | இரண்டு மணி<br>Two hours |

**வழிமுறைகள்:**

- **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக**

1. பின்வரும் கூற்றுக்களில் சிற்றினப் பொருளியல் சார்ந்த நேர்கூற்று
   1) நுகர்வோர் வருமானத்திற்கும் இழிவுப் பண்டத்தின் கேள்விக்கும் இடையில் எதிர்க்கணியத் தொடர்பு உண்டு.
   2) பண நிரம்பலுக்கும் வட்டி வீதத்திற்கும் இடையில் எதிர்க்கணியத் தொடர்பு உண்டு.
   3) பொருளாதார வளர்ச்சிக்கும் வேலையின்மைக்கும் இடையில் எதிர்க்கணியத் தொடர்பு உண்டு.
   4) வறுமை வீதத்தை குறைப்பதற்கு பணவீக்க வீதமானது 5% ஐ விடக் குறைவாக குறைக்க வேண்டும்.
   5) உயர்நிலை மனித அபிவிருத்தியை அடைய வேண்டுமாயின் வறுமையை ஒழிக்க வேண்டும்.

2. பொருளாதாரமல்லாப் பண்டங்களுடன் மட்டும் தொடர்புடைய பண்பு யாது?
   1) அருமையான வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகும்
   2) இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகும்.
   3) மீளுருவாக்கத்தக்க வளங்களை மட்டும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகும்.
   4) பூச்சிய விலையின் கீழ் அமையச்செலவு ஏதுமின்றி பயன்படுத்தப்படக்கூடியதாக இருப்பதாகும்.
   5) மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகும்.

3. உற்பத்தி பிரச்சினைக்கு சந்தை பொருளாதாரம் தீர்வு காண்பது?
   1) பொருட்சந்தையின் விலைச்சமிஞ்ஞைகளுக்கு எதிர்வினையாற்றுவதன் மூலம்
   2) காரணிச்சந்தையின் விலைச்சமிஞ்ஞைகளுக்கு எதிர்வினையாற்றுவதன் மூலம்
   3) சமூக நலனை உச்சப்படுத்தலுக்கு எதிர்வினையாற்றுவதன் மூலம்
   4) பூரண வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு எதிர்வினையாற்றுவதன் மூலம்
   5) அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட விலைப் பொறிமுறைக்கு எதிர்வினையாற்றுவதன் மூலம்

4. உணவையும் ஆடைகளையும் உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள ஒரு உற்பத்திச் சேர்க்கை, வளையியின் உள்ளே இடம் பெயர்வதற்கு ஏதுவாகக் கூடிய நிகழ்வு?
   1) பொருளாதாரத்தின் உற்பத்தித் தொழில்நுட்பம் முன்னரை விட மேம்படுதல்
   2) ஆடை உற்பத்தித் துறையிலிருந்து உணவு உற்பத்தித் துறையை நோக்கி வளங்கள் மாற்றப்படல்
   3) பொருளாதாரத்தின் பயிற்றப்பட்ட ஊழியர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் வெளிநாடுகளை நோக்கி இடம்பெயரல்
   4) மூலப்பொருள் கட்டுப்பாடு காரணமாக நாளொன்றில் சில மணித்தியாலங்கள் தொழிற்சாலைகள் மூடப்படல்
   5) கேள்வி அதிகரிப்பின் காரணமாக பொருளாதாரத்தின் வளங்கள் மிகை இயலளவில் பயன்படுத்தப்படல்

5. சந்தைக் கேள்வி வளையில் இடப்புறம் நகரக் காரணமாவது
   1) கருதப்படும் பொருளின் விலை அதிகரித்தல்
   2) நுகர்வோர் வருமானம் அதிகரித்தல்
   3) பதிலீட்டுப் பொருளின் விலை அதிகரித்தல்
   4) நிரப்புப் பொருளின் விலை அதிகரித்தல்
   5) கருதப்படும் பொருளின் விலை எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என்னும் எதிர்பார்க்கை

6. சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒரு பொருளின் விலை ரூபா 20 இல் 1000 அலகுகளுக்கு கேள்வி எழுப்பப்படும் அதேவேளை அந்த விலையில் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் -0.5 ஆக இருந்தது. இப்பொருளின் விலை ரூபா 22 ஆயின் சந்தைக் கேள்வியின் அளவு யாது?
   1) 995 அலகுகள்
   2) 975 அலகுகள்
   3) 950 அலகுகள்
   4) 900 அலகுகள்
   5) 500 அலகுகள்

7. X பொருளுக்கான கிட்டிய பதிலீடு லு பொருள் ஆயின்
   1) X, Y ஆகிய இரண்டினதும் விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியத்திற்கு கிடடிய நேர்க்கணிய பெறுமதிகை எடுக்கும்.
   2) X, Y ஆகிய இரண்டிற்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியத்திற்கு கிட்டிய எதிர்க்கணியப் பெறுமதியை எடுக்கும்.
   3) X, Y ஆகிய இரண்டினதும் வருமானக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியத்திற்கு கிட்டிய நேர்க்கணியப் பெறுமதியை எடுக்கும்.
   4) X, Y ஆகிய இரண்டிற்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியத்திற்கு கிட்டிய நேர்க்கணியப் பெறுமதியை எடுக்கும்.
   5) X, Y ஆகிய இரண்டிற்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் 1ஐ விடக் கூடிய நேர்க்கணியப் பெறுமதியை எடுக்கும்.

8. சந்தை நிரம்பல் வளையி நேர்க்கணியச் சாய்வினைக் கொண்டிருக்க பிரபலமான காரணியாவது
   1) வெளியீட்டை அதிகரிக்கும் போது அமையச் செலவு அதிகரிப்பதாகும்.
   2) மாறும் உள்ளீடுகளை அதிகரிக்கும் போது சராசரி விளைதிறன் குறைவடைவதாகும்
   3) வெளியீட்டை அதிகரிக்கும் போது எல்லைச் செலவு அதிகரிப்பதாகும்.
   4) மாறும் உள்ளீடுகளை அதிகரிக்கும் போது எல்லைச் செலவு அதிகரிப்பதாகும்
   5) தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட உற்பத்திச் செலவு குறைவடைவதாகும்.

9. A பொருளின் சந்தை நிரம்பல் வளையியின் சமன்பாடு $QS_A$ = - 80 + 2 ஆகும். B பொருளின் நிரம்பல் வளையியின் சமன்பாடு $QS_B$ = 50+3 ஆகும். இவ்விரு பொருட்களின் விலை அதிகரிக்கும் போது நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் மாற்றமடையும் விதத்தை சரியாகக் காட்டும் விடை யாது?


| | A பொருளின் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் | B பொருளின் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் |
|---|---|---|
| 1 | குறையும் | அதிகரிக்கும் |
| 2 | அதிகரிக்கும் | குறையும் |
| 3 | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4 | குறையும் | குறையும் |
| 5 | குறையும் | நிலையாகும் |

10. போட்டிச் சந்தையின் கேள்வி வளையி நெகிழ்வற்றதாகவும் நிரம்பல் வளையி நெகிழ்வுள்ளதாக இருந்து பின்னர் நெகிழ்வற்ற நிலையில் பெயர்ச்சியடைந்தது. இதன் விளைவாக சமநிலை விலை மற்றும் நுகர்வோர் மிகை மாற்றமடையும் விதத்தை சரியாகக் காட்டும் விடை யாது?

| | சமநிலை விலை | நுகர்வோர் மிகை |
|---|---|---|
| 1) | உயரும் | குறையும் |
| 2) | குறையும் | உயரும் |
| 3) | குறையும் | குறையும் |
| 4) | உயரும் | உயரும் |
| 5) | குறையும் | மாறாது |

11. போட்டிச் சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளுக்கான பதிலீட்டுப் பொருட்களின் விலை குறைவடையும் போது அப்பொருளின் உற்பத்திவ் செலவும் குறைவடைந்தது. இந்நிகழ்வின் பின்னர் பொருளின்
   1) சமநிலை விலையும் சமநிலைத் தொகையும் அதிகரிக்கும்
   2) சமநிலை விலையும் சமநிலைத் தொகையும் குறைவடையும்
   3) சமநிலை விலை அதிகரித்து சமநிலைத் தொகை குறைவடையும்
   4) சமநிலை விலை குறைந்து சமநிலைத் தொகை அதிகரிக்கும்
   5) சமநிலை விலை கட்டாயம் அதிகரிப்பதுடன் சமநிலைத் தொகை மாற்றம் நிச்சயமற்றது.

12. கோதுமை மாவுக்கு அரசாங்கம் 10 ரூபா மானியத்தை உற்பத்தியாளருக்கு வழங்கிய பின்னர் சந்தைச் சமநிலையில் ஏற்படும் மாற்றம் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. மானியத்தின் பின்னர் உற்பத்தியாளன் மிகை மானியத்தில் உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் நன்மையின் அளவு மற்றும் மீளமுடியா நலனிழப்பு என்பவற்றை சரியாக வரிசைப்படுத்தும் விடை யாது?




| | உற்பத்தியாளன் மிகை | உற்பத்தியாளனுக்குக் கிடைக்கும் நன்மை | மீள முடியா நலன் இழப்பு |
|---|---|---|---|
| 1) | 3125 | 1250 | 250 |
| 2) | 3125 | 2500 | 250 |
| 3) | 4000 | 1250 | 500 |
| 4) | 4000 | 1125 | 250 |
| 5) | 6000 | 1250 | 250 |

13. போட்டிச் சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளுக்கு குறைந்த பட்ச விலைகளை நிர்ணயித்து மிகை நிரம்பலை அரசாங்கம் கொள்வனவு செய்யுமாயின் சந்தையில் ஏற்பட முடியாத நிகழ்வாவது?
   1) உற்பத்தியாளன் மிகை அதிகரித்தல்
   2) நுகர்வோர் மிகை அதிகரித்தல்
   3) கொள்வனவாளன் செலுத்தும் விலை அதிகரித்தல்
   4) சமூக நலன் வீழ்ச்சியடைதல்
   5) மிகையுற்பத்தி ஏற்படல்

14. அரசாங்கம் பொருட்கள் மீது வரி அறவிடும் போது நுகர்வோர் அதிக வரிச்சுமையை தாங்க நேர்வது எத்தகைய கேள்வி மற்றும் நிரம்பல் நெகிழ்ச்சியைக் கொண்ட பொருள் மீது விதிக்கப்படும் போதாகும்?

| | கேள்வி நெகிழ்ச்சி | நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1) | நெகிழ்வற்றது | நெகிழ்வுள்ளது |
| 2) | அலகு நெகிழ்ச்சி | அலகு நெகிழ்ச்சி |
| 3) | நெகிழ்வுள்ளது | நெகிழ்வற்றது |
| 4) | அலகு நெகிழ்ச்சி | நெகிழ்வற்றது |
| 5) | பூரண நெகிழ்ச்சி | பூரண நெகிழ்ச்சி |

15. ஒரு நிறுவனம் தனது உற்பத்திச் செயன்முறையில் குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியை எதிர்நோக்குமாயின் மாறும் உள்ளீடுகளை அதிகம் ஈடுபடுத்தும் போது சராசரி ஒற்பத்தி உச்சத்தை அடைந்து பின்வருவனவற்றுள் எது நடைபெறக்கூடும்?
   1) எல்லைச்செலவு இழிவுப் புள்ளியை அடையும்
   2) சராசரி மாறும் செலவு வீழ்ச்சியடையும்
   3) எல்லையுற்பத்தி அதிகரிக்கும்
   4) எல்லைச் செலவும் சராசரி மாறும் செலவும் அதிகரிக்கும்
   5) எல்லைச் செலவும் சராசரி மாறும் செலவும் குறைவடையும்

16. ஒரு உற்பத்தி நிறுவனத்தின் செலவுகள் பற்றிய தரவுகள் பின்வரும் அட்டவணையில் உள்ளன.

| வெளியீடு அலகுகள் | மொத்தச் செலவு ரூபா | எல்லைவ் செலவு ரூபா |
|---|---|---|
| 1 | 200 | 50 |
| 2 | 230 | 30 |
| 3 | 250 | 20 |
| 4 | 275 | 25 |

மேலுள்ள தகவல்களின் படி 2 அலகு வெளியீட்டில் சராசரி மாறும் செலவு
   1) 15 ரூபா    2) 30 ரூபா    3) 40 ரூபா
   4) 50 ரூபா    5) 90 ரூபா

17. சிலருரிமைச் சந்தையில் அவதானிக்கக்கூடிய பண்பாவது?
   1) ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள் மட்டும் உற்பத்தி செய்யப்படல்
   2) சந்தையில் தடையற்ற பிரவேச வெளியேற்ற சுதந்திரம் காணப்படல்
   3) நிறுவனம் பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையியை எதிர்நோக்கல்
   4) நிறுவனங்கள் பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியருத்தல்
   5) நீண்டகாலத்தில் நிறுவனம் சாதாரண இலாபத்தை ஈட்டல்

18. நிறைபோட்டி கைத்தொழிலில் உள்ள ஒரு நிறுவனம் குறுங்காலத்தில் பின்வரும் நிலைமையை எதிர்நோக்குகிறது

| | |
|---|---|
| வெளியீடு | = 5000 அலகுகள் |
| அலகொன்றின் சந்தை விலை | = 5 ரூபா |
| மொத்த நிலையான செலவு | = 10000 ரூபா |
| மொத்தச் செலவு | = 40000 ரூபா |
| 500 அலகுகள் உற்பத்தியில் எல்லைச் செலவு | = 5 ரூபா |

இலாபத்தை உச்சப்படுத்தும் நோக்கில் இந்நிறுவனம் எடுக்க வேண்டிய உசிதமான தர்க்க ரீதியான தீர்மானம்?

1) வெளியீட்டின் அளவைக் குறைத்து உற்பத்தில் ஈடுபடல்
2) பொருளின் விலையை அதிகரித்தல்
3) வெளியீட்டின் அளவை அதிகரித்தல்
4) நிறுவனம் கைத்தொழிலில் இருந்து வெளியேறல்
5) வெளியீட்டின் அளவை மாற்றாதிருத்தல்

19. ஒரு பொருளாதாரத்துடன் தொடர்புடைய பேரினப் பொருளியல் தரவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. (சகல இலக்கங்களும் மில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | = 800 |
| தனியார் நுகர்வுச் செலவீடு | = 1200 |
| நிலையான மூலதன நுகர்வு | = 250 |
| அரசாங்கத்தின் நுகர்வுச் செலவீடு | = 2400 |
| பொருட்கள் சேவைகள் மீதான வரிகள் | = 400 |
| தேறிய ஏற்றுமதிகள் | = -500 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி

1) 3900 மில்லியன் ரூபா
2) 4650 மில்லியன் ரூபா
3) 4900 மில்லியன் ரூபா
4) 5050 மில்லியன் ரூபா
5) 5150 மில்லியன் ரூபா

20. பின்வரும் கூற்றுக்களில் மொத்த தேசிய சேமிப்பைச் சரியாக காட்டும் கூற்றாவது?

1) மொத்த முதலீடு + தேறிய ஏற்றுமதி
2) மொத்த உள்நாட்டு உற்பத்தி + தேறிய ஏற்றுமதி
3) மொத்த உள்நாட்டு உற்பத்தி + வெளிநாட்டு தேறிய முதனிலை வருமானம்
4) மொத்த முதலீடு + சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு
5) மொத்த முதலீடு + வெளிநாட்டு தேறிய முதனிலை வருமானம் + வெளிநாட்டு தேறிய இரண்டாந்தர வருமானம்

21. பினவரும் உற்பத்தி நடவடிக்கைகளில் தேசிய கணக்கீட்டு மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படுவன?

1) பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடப் புத்தகங்களை அச்சிடும் செலவு
2) காடுகளில் தேன் உற்பத்தி அதிகரிப்பு
3) அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவு
4) கம்பனிப் பங்குகளை கொள்வனவு செய்யும் செலவுகள்
5) இல்லத்தரசிகள் வீடுகளில் வயது முதிர்ந்தோரைப் பராமரித்தல்

22. மொத்த வெளியீட்டின் பெறுமதியிலிருந்து இடை நிலை உள்ளீடுகளின் பெறுமதியை கழித்துப் பெறப்படுவது?
   1) மொத்தப் பெறுமதிச் சேர்க்கையின் பெறுமதி
   2) கையிருப்புகளில் ஏற்படும் மாற்றம்
   3) நிலையான மூலதன நுகர்வாகும்
   4) பெறுமதிகளில் ஏற்படும் மாற்றமாகும்
   5) தேறிய செயற்பாட்டு மிகை

23. அரசாங்கத் துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரத்தில் நுகர்வுச் செலவீடு C = 400 + 0.8 Y ஆகும். இப்பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிட்டு 200 மில்லியன் வரி வருமானத்தை திரட்டவும் 60 மில்லியன் மாற்றல் கொடுப்பனவை வழங்கத் தீர்மானிக்குமாயின் பொருளாதாரத்தின் தேசிய வருமானத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நுகர்வுச் சார்பு யாது?
   1) C = 540 + 0.8y ஆகும்.
   2) C = 512 + 0.8y ஆகும்.
   3) C = 288 + 0.8y ஆகும்.
   4) C = 260 + 0.8y ஆகும்.
   5) C = 240 + 0.8y ஆகும்.

24. எல்லை நுகர்வு நாட்டம் 0.8 ஆகுக் காணப்படும் மூடப்பட்ட பொருளாதாரத்தில் சாத்திய வெளியீட்டு மட்டம் 10000 ஆகும். உண்மையான வெளியீட்டு மட்டம் 8000 ஆகும். சாத்திய வெளியீட்டு மட்டத்தை அடைய வேண்டுமாயின் அதற்கு மிகப் பொருத்தமான நடவடிக்கை?
   1) அரசாங்கக் கொள்வனவுகளை 250 இனால் அதிகரிப்பதுடன் அரச வரிகளை 150 இனால் குறைத்தல்
   2) அரசாங்கக் கொள்வனவுகளை 240 இனால் அதிகரிப்பதுடன் அரச வரிகளை 200 இனால் குறைத்தல்
   3) அரசாங்கக் கொள்வனவுகளை 200 இனால் அதிகரிப்பதுடன் அரச வரிகளை 240 இனால் குறைத்தல்
   4) அரசாங்கக் கொள்வனவுகளை 200 இனால் அதிகரிப்பதுடன் அரச வரிகளை 200 இனால் குறைத்தல்
   5) அரசாங்கக் கொள்வனவுகளையும் அரச வரிகளையும் 200 இனால் அதிகரித்தல்

25. நிறை தொழில் வெளியீட்டு மட்டத்தில் உள்ள ஒரு பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி வளையி வலதுபுறமாக இடம் பெயருமாயின்,
   1) மெய் உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பதுடன் விலை மட்டம் வீழ்ச்சியடையும்
   2) மெய் உள்நாட்டு உற்பத்தி நிலையாக இருப்பதுடன் விலை மட்டம் வீழ்ச்சியடையும்
   3) மெய் உள்நாட்டு உற்பத்தி குறைவடைவதுடன் விலை மட்டம் அதிகரிக்கும்.
   4) மெய் உள்நாட்டு உற்பத்தியும் விலைமட்டமும் அதிகரிக்கும்
   5) மெய் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கின்ற போதிலும் விலை மட்டம் நிலையாக இருக்கும்.

26. பணக்கேள்வியின் மீது எதிர்க்கணிய தொடர்பை கொண்டுள்ள பணக்கேள்வியைத் தீர்மானிக்கும் காரணி,
   1) வட்டி வீதமாகும்
   2) வருமானம் பெறப்படும் கால இடைவெளியாகும்
   3) தேறிய தேசிய வருமானமாகும்
   4) பொது விலை மட்டமாகும்
   5) பிணைப்பத்திரங்களின் நிகழ்கால விலையாகும்

27. பின்வரும் விடைகளில் $M2_b$ பண நிரம்பலில் உள்ளடக்கப்படாத விடயத்தை உள்ளடக்கியுள்ள விடை,
   1) பொது மக்களிடமுள்ள புழக்கப்பணம், பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புகளாகும்.
   2) பொது மக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள சேமிப்பு வைப்புகளும் கேள்வி வைப்புகளுமாகும்.
   3) பொது மக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள தவணை வைப்புகளும் சேமிப்பு வைப்புகளுமாகும்.
   4) வணிக வங்களிடமுள்ள புழக்கப்பணம் மற்றும் வணிக வங்கிகளின் பெயரில் மத்திய வங்கியிலுள்ள ஒதுக்குகளாகும்
   5) வணிக வங்கிகளிலுள்ள வதிவாளர் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு செலவாணி கணக்குகளாகும்.

28. பணநிரம்பல் 1 000 ரூபாவாகவும் விலைமட்டம் 10 ஆகவும் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 5 000 ரூபாவாகவும் காணப்படுமாயின் பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகமும் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் முறையே,
   1) 3 மற்றும் 5 000 ஆகும்
   2) 5 மற்றும் 500 ஆகும்
   3) 10 மற்றும் 5 000 ஆகும்
   4) 50 மற்றும் 500 ஆகும்.
   5) 50 மற்றும் 50 000 ஆகும்

29. பொருளாதாரத்தின் உயர்வலுப் பணம் அதிகரிப்பதற்கு செல்வாக்கு செலுத்தும் ஒரு காரணி,
   1) மத்திய வங்கியானது வணிக வங்கிகளிடமிருந்து அந்நிய செலவாணியை கொள்வனவு செய்வதாகும்.
   2) மத்திய வங்கி அரசாங்கத்திற்கு அந்நிய செலவாணியை விற்பதாகும்.
   3) மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு அந்நிய செலவாணியை விற்பதாகும்.
   4) மத்திய வங்கி அரசாங்கத்திற்கு வழங்கிய கடனை மீளப் பெறுவதாகும்.
   5) மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கிய கடனை மீளப் பெறுவதாகும்.


30. ஒரு வணிக வங்கியின் ஐந்தொகையின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| பொறுப்புகள் மில்லியன் ரூபா | | சொத்துக்கள் மில்லியன் ரூபா | |
|---|---|---|---|
| வைப்புகள் | 90 000 | ஒதுக்குகள் | 12 000 |
| | | பிணையங்கள் | 30 000 |
| | | கடன்கள் | 90 000 |
| | 90 000 | | 90 000 |

நியதி ஒதுக்கு தேவைகள் 10% ஆயின் இவ்வங்கி வழங்கக் கூடிய கடனின் உச்ச அளவு யாது?

   1) 2 000 ரூபாவாகும்
   2) 3 000 ரூபாவாகும்
   3) 5 000 ரூபாவாகும்
   4) 10 000 ரூபாவாகும்
   5) 15 000 ரூபாவாகும்

31. ஒரு பொருளின் எல்லை தனியார் செலவு வளையியும், எல்லை சமூக செலவு வளையியும், எல்லை தனியார் நன்மை வளையியும், எல்லை சமூக நன்மை வளையியும் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.
மேற்படி வரைபடத்தில் காட்டப்படுவது,




1) உற்பத்தியின் போது எதிர்க்கணிய வெளிவாரியுடைய பொருளின் சமூக ரீதியில் உத்தம உற்பத்தி உற்பத்தி மட்டம் சந்தையின் உற்பத்தி மட்டத்தில் விடக் கூடுதலாக இருக்கும் என்பதாகும்.
2) நுகர்வின் போது எதிர்க்கணிய வெளிவாரியுடைய ஒரு பொருளின் சமூக ரீதியில் உத்தம உற்பத்தி மட்டம் சந்தையின் உற்பத்தி மட்டத்தை விட உயர்வாக இருக்கும் என்பதாகும்.
3) தீங்கு விளைக்கும் ஒரு பொருளின் சமூக ரீதியில் உத்தம உற்பத்தி மட்டம் சந்தையின் உற்பத்தி மட்டத்தை விட உயர்வாக இருக்கும் என்பதாகும்.
4) ஒரு மேன்மைப் பொருளின் சமூக ரீதியில் உத்தமமான உற்பத்தி மட்டம் சந்தையின் உற்பத்தழ மட்டத்தை விட உயர்வாக இருக்கும் என்பதாகும்.
5) உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரியுடைய பொருளின் சந்தை உற்பத்தி மட்டம் சமூக ரீதியில் உத்தம உற்பத்தி மட்டத்தை விட உயர்வாக இருக்கும் என்பதாகும்.

32. வரித்தத்துவங்கள் என்ற வகையில் பரஸ்பர முரணான நிலையில் உள்ளவை,
1) எளிமைத்தனமையும் நியாயத்தன்மையும்
2) நடுநிலைத்தன்மையும் நியாயத்தன்மையும்
3) எளிமைத்தன்மையும் சிக்கனத்தன்மையும்
4) நடுநிலைத்தன்மையும் சிக்கனத்தன்மையும்
5) வினைத்திற உடைமையும் எளிமைத்தன்மையும்

33. ஒரு பொருளாதாரத்தின் அரசிறை நடவடிக்கைகள் பற்றிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(எல்லா இலக்கங்களும் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| வரி வருவாய் | 40 000 |
| வரியல்லா வருவாய் | 10 000 |
| மானியங்கள் | 5 000 |
| நடைமுறைச் செலவுகள் | 59 000 |
| மூலதனச் செலவுகள் | 8 000 |
| தேசிய கடனளிப்பு | 2 000 |

மேலுள்ள தகவல்களின் படி இப் பொருளாதாரத்தின் பாதீட்டின் நடைமுறைக் கணக்கு மீதியையும் மொத்த பாதீட்டு மீதியையும் சரியாக காட்டும் விடை எது?

| நடைமுறை கணக்கு மீதி (பில்லியன் ரூபா) | மொத்த பாதீட்டு மீதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| 1) 4 000 | 14 000 |
| 2) 4 000 | 14 000 |
| 3) 9 000 | 14 000 |
| 4) 9 000 | 14 000 |
| 5) 12 000 | 14 000 |

34. 2024 ஆண்டில் இலங்கையின் நடைமுறை செலவீனத்தின் மிகப் பெரிய கூறாக அமைந்தது?
1) கடன் வட்டிச் செலுத்தல்களாகும்
2) அரச ஊழியர்களின் சம்பளங்களாகும்
3) ஓய்வூதியச் செலவுகளாகும்
4) நடைமுறை மாற்றல் செலவுகளாகும்
5) பொருள்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு மீதான செலவுகளும்

35. 2024 ஆண்டின் இலங்கை அரசாங்கத்தின் மொத்த படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக,
1) 96.1% ஆகும்
2) 100% ஆகும்
3) 114.2% ஆகும்
4) 119.6% ஆகும்
5) 104.7% ஆகும்

36. பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் ஓரலகு உற்பத்தி வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடிய கோதுமை மற்றும் பால்மா அலகுகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

| பொருள் | பிரான்ஸ் | ஜேர்மனி |
|---|---|---|
| கோதுமை $(kg)$ | 6 | 4 |
| பால்மா $(kg)$ | 2 | 4 |

பரஸ்பர நன்மை தரும் வர்த்தக இடம்பெற வேண்டுமாயின் ஜேர்மனி பிரான்சுடன் எந்த பரிமாற்ற வீதத்தில் வர்த்தகம் செய்ய விரும்பும்?

1) 1 கிலோகிராம் பால்மாவுக்காக 2 கிலோகிராமை விட குறைவான கோதுமை
2) 1 கிலோகிராம் பால்மாவுக்காக 1 கிலோகிராமை விட குறைவான கோதுமை
3) 1 கிலோகிராம் பால்மாவுக்காக 2-4 கிலோகிராமிற்கு இடையிலான கோதுமை
4) 1 கிலோகிராம் பால்மாவுக்காக 1-3 கிலோகிராமிற்கு இடையிலான கோதுமை
5) 1 கிலோகிராம் பால்மாவுக்காக 4 கிலோகிராமுக்கு கூடிய கோதுமை

37. உருளைக்கிழங்கு சந்தை பற்றிய பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான தீர்வை 25% ஆகும். இறக்குமதி உள்ளீடுகளின் மீதான தீர்வை 20% ஆகும். உருளைக்கிழங்கு 1 கிராமின் இறக்குமதி விலை 80 ரூபாவாகும். ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கு உற்பத்திக்கு தேவையான இறக்குமதி உள்ளீடுகளின் செலவு 50 ரூபாவாகும்.
மேற்படி தரவுகளின் படி உருளைகிழங்கு உற்பத்தி மீதான பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் யாது?
1) 20.0% ஆகும்
2) 33.33% ஆகும்
3) 40.33% ஆகும்
4) 66.6% ஆகும்
5) 80.66% ஆகும்

38. 2024ம் ஆண்டில் இலங்கைக்கு அதி கூடிய ஏற்றுமதி வருவாயை ஈட்டித்தரும் பொருளும் அதன் ஏற்றுமதி சந்தையும் முறையே,
1) தேயிலை மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகும்.
2) ஆடைகளும் புடைவைகளும் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகும்.
3) ஆடைகளும் புடைவைகளும் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகும்.
4) தேயிலை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகும்
5) கனிய எண்ணெய் உற்பத்திகளும் இந்தியாவுமாகும்.

39. ஒரு குறித்த நாட்டின் சென்மதி நிலுவையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில் தரவுகள் கீழே தரப்படுகின்றது.

| வகை | பெறுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|
| ஏற்றுமதிகள் (பொருள்) | 5000 |
| இறக்குமதிகள் (பொருள்) | 7000 |
| பணிகள் (தேறியது) | 300 |
| முதலாந்தர வருவாய்கள் (தேறியது) | 100 |
| இரண்டாந்தர வருவாய்கள் (தேறியது) | 150 |
| மூலதனக் கணக்கு (தேறியது) | 600 |

மேலே தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய இந்நாட்டின் சென்மதி நிலுவை நிலை பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?

1) வரத்தக கணக்கில் 2000 மில்லியன் ரூபா மிகை நிலை உள்ளது.
2) நடைமுறைக் கணக்கில் 2350 மில்லியன் ரூபா குறைநிலை உள்ளது.
3) நிதிக்கணக்கில் 1650 மில்லியன் ரூபா மிகை நிலை உள்ளது.
4) நிதிக்கணக்கில் 1050 மில்லியன் ரூபா குறை நிலை உள்ளது.
5) நடைமுறை கணக்கிலும் மூலதன கணக்கிலும் 1050 மில்லியன் ரூபா குறைநிலை உள்ளது.


40. வர்த்தக மாற்று விகிதத்தின் பெறுமதி வீழ்ச்சியடைய ஏதுவாகும் ஒரு காரணி,

1) ஏற்றுமதிகளின் விலை அதிகரிப்பை விட குறைந்த வேகத்தில் இறக்குமதிகளின் விலை அதிகரித்தல்.
2) ஏற்றுமதி விலையதிகரிப்பும் இறக்குமதி விலை வீழ்ச்சியும் ஏக காலத்தில் இடம்பெறல்.
3) ஏற்றுமதி விலை மாறாதிருக்க இறக்குமதி விலை அதிகரித்தல்.
4) ஏற்றுமதிகளின் விலை அதிகரிப்பை விட கூடிய வேகத்தில் இறக்குமதிகளின் விலை அதிகரித்தல்.
5) ஏற்றுமதி விலைகளும் இறக்குமதி விலைகளும் ஒரேயளவில் அதிகரித்தல்.

41. போட்டியின் நன்மையை தீர்மானிப்பதில் வேறாக்கம் செய்யப்படுவதன் மூலம் நன்மையை ஏற்படுத்தும் மூலாதாரங்களுடன் தொடர்புடைய காரணியாவது?

1) உற்பத்தி இயல்கையின் பூரண பயன்பாடு
2) விளம்பரம்
3) உயர் உற்பத்தித் திறன்
4) முன்னேற்றகரமான தொழிநுட்பப் பிரயோகம்
5) வினைத்திறன் வாய்ந்த விநியோக கட்டமைப்பு

42. பின்வரும் வரைபடத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர்களில் காட்டப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கான கேள்வி $D_1$ இலிருந்து $D_2$ ஆக இடம்பெயருமாயின் ஏற்படக் கூடிய விளைவு யாது?



1) அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் திறைசேரி உண்டியல்களில் முதலிடுவது இலாபகரமானதாகும்.
2) அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கைப் பொருட்களுக்கான விலை மிக குறைவாக காணப்படும்.
3) இலங்கையர்களுக்கு அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்வது இலாபகரமானதாக அமையும்.
4) அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான விலை மிக அதிகமாக காணப்படும்.
5) அமெரிக்காவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வது இலங்கையர்களுக்கு பாதிப்பாக அமையும்.


43. பொருளாதார வளர்ச்சியை மிகச்சரியாக குறித்து காட்டும் கூற்று எது?
1) சாத்திய உற்பத்தி ஆற்றல் அதிகரித்தல்
2) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தல்.
3) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெயரளவுப் பெறுமதி அதிகரித்தல்
4) தலைக்குரிய மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தல்.
5) கொள்வனவு சக்தி சமப்படுத்தப்பட்ட தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம் அதிகரித்தல்

44. 2022 இல் மனித அபிவிருத்திக் குறிக்காட்டியில் மிகக் குறைந்த பெறுமதியும் மிகக் கூடிய பெறுமதியையும் கொண்டிருந்த நாடுகளை முறையே சரியாகக் காட்டும் விடை எது?
1) மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் ஐஸ்லாந்து
2) தெற்கு சூடான் மற்றும் நோர்வே
3) தெற்கு சூடான் மற்றும் சுவிட்ஸர்லாந்து
4) சோமாலியா மற்றும் நோர்வே
5) சோமாலியா மற்றும் சுவிட்ஸர்லாந்து

45. உலக வங்கியால் தலைக்குரிய மொத்த தேசிய வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளை வகைப்படுத்தும் போது 2024 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் பிரிவாக கருதப்படுவது தலைக்குரிய வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர்களில்
1) 1085ஐ விடக் குறைவாகப் பெறும் நாடுகளாகும்.
2) 1105ஐ விடக் குறைவாகப் பெறும் நாடுகளாகும்
3) 1135ஐ விடக் குறைவாகப் பெறும் நாடுகளாகும்
4) 1145ஐ விடக் குறைவாகப் பெறும் நாடுகளாகும்
5) 1245ஐ விடக் குறைவாகப் பெறும் நாடுகளாகும்

46. தொகைமதிப்பு குள்ளிவிபரத் திணைக்களத்தின் 2019 ஆண்டுக்கான கணக்கெடுப்புக்கு அமைய இலங்கையின் தேசிய பல்பரிமாண வறுமைக்கு உட்பட்டுள்ள சனத்தொகையின் சதவீதம்,
1) 15% ஆகும்
2) 16% ஆகும்
3) 17.2% ஆகும்
4) 17.8% ஆகும்
5) 51.3% ஆகும்

47. கீழே தரப்பட்டுள்ளவாறு குறிப்பிட்ட ஒரு நாட்டின் லோரன்ஸ் வளையி 1 இலிருந்து 2 ஆக இடம்பெயர்ந்துள்ளது. லோரன்ஸ் வளையியின் இடம்பெயர்வுக்கு ஏதுவாக கூடிய காரணம் எதுவாகும்?




1) அரசாங்கம் வருமானங்கள் மீது விருத்தி முறை வரி விதித்தல் அதிகரித்தல்.
2) அரசாங்கம் குறைந்து செல்லும் வரி விதிப்பு முறையை முற்றாக நீக்குதல்.
3) அரசாங்கம் சந்தைப் பொறிமுறையின் மீது ஒழுங்குறுத்தல்களை விரிவுபடுத்தல்.
4) அரசாங்கம் சமூக பாதுகாப்பு வலைப்பின்னல்களின் செயற்பாட்டை விரிவாக்கல்.
5) அரசாங்கம் பாதுகாப்பு வலைப்பின்னல்களை செயற்படுத்துவதில் இருந்து முற்றாக விலகுதல்

48. பின்வரும் அட்டவணை கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் குடியியல் சார்பில் சில தகவல்களை காட்டுகிறது.

| ஆண்டு | தொழில் செய்யக் கூடிய நிலையில் உள்ள சனத்தொகை (மில்லியன்) | தொழில் புரியும் சனத்தொகை (மில்லியன்) | தொழிலற்ற சனத்தொகை (மில்லியன்) |
|---|---|---|---|
| 2023 | 20 | 8 | 2 |
| 2024 | 25 | 9 | 3 |

இத்தகவல்களின் படி 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ம் ஆண்டில்,

1) தொழிற்படையின் பங்குபற்றல் வீதம் 50% இலிருந்து 48% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.
2) தொழிற்படையின் பங்குபற்றல் வீதம் 40% இலிருந்து 50% ஆக அதிகரித்துள்ளது.
3) தொழில் வாய்ப்பு வீதம் 80% இலிருந்து 60% ஆக அதிகரித்துள்ளது.
4) தொழிலின்மை வீதம் 20% இலிருந்து 30% ஆக அதிகரித்துள்ளது.
5) தொழிற்படையின் பங்குபற்றல் வீதம் 50% இலிருந்து 40% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

49. அஸ்வெசும நலன்புரி திட்டம் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை ஏறுவரிசைப்படி வகைப்படுத்தியுள்ள முறை,
1) கடும் வறுமை, வறுமை, அவதானத்திற்குட்பட்ட மற்றும் மாறுநிலை என்றாகும்.
2) வறுமை, கடும் வறுமை, மாறுநிலை, அவதானத்திற்குட்பட்ட என்றவாறாகும்.
3) அவதானத்திற்குட்பட்ட, கடும் வறுமை, வறுமை, மாறும்நிலை என்றாகும்.
4) மாறுநிலை, அவதானத்திற்குட்பட்ட, வறுமை மற்றும் கடும் வறுமை என்றாகும்.
5) கடும் வறுமை, வறுமை, மாறுநிலை, அவதானத்திற்குட்பட்ட என்றாகும்.

50. பாரிஸ் சிலை கடன் வழங்குனர் குழுவுக்கு உட்படாத இலங்கைக்கு இருபக்கக் கடன் வழங்கும் ஒரு நாடு,
1) குவைத் ஆகும்
2) ஐக்கிய அமெரிக்கா ஆகும்
3) ஐக்கிய இராச்சியம் ஆகும்
4) கனடா ஆகும்
5) ஜப்பான் ஆகும்

Ministry of Education, Higher Education and Vocational Education

**கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை - 2025**

**General Certificate of Education (Adv. Level) Examination 2025**

**பயிற்சி வினாத்தாள்**

**Practice Question Paper**

| | | |
|---|---|---|
| **பொருளியல் II**<br>**Economics II** | **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**<br>**Additional Reading Time - 10 minutes** | **மூன்று மணி**<br>**Threee hours** |

கூடுதல் வாசிப்பு நேரத்தை வினாத்தாளைப் படிக்கவும் கேள்விகளைத் தேர்நதெடுக்கவும், பதில்களை எழுதும் போது முன்னுரிமை அளிக்கப்படும் கேள்விகளை ஒழுங்கமைக்கவும் பயன்படுத்கவும்.

**வழிமுறைகள்:**

- **பகுதி 'அ' இலிருந்து குறைந்தது இரண்டு கேள்விகளையும் பகுதி 'ஆ' இலிருந்து குறைந்தது இரண்டு கேள்விகளையும் தேர்ந்தெடுத்து ஐந்து கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்கவும்.**
- **வரைபடத்தாள் வமங்கப்படும்.**

## பகுதி 'அ'

**(இந்தப் பகுதியிலிருந்து குறைந்தது 02 வினாக்களைத் தேர்ந்தெடுக்கவும்)**

01


(i) 'நிலம்' மற்றும் 'இயற்கை மூலதனம்' என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை உதாரணங்கள் ஊடாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) 'தெரிவுப் பிரச்சினை ஏற்படுவதற்கு ஒரே காரணம் வளங்களின் அருமைத்தன்மையாகும்' இக்கூற்றுடன் நீர் உடன்படுவீர் என்பதை காரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)


(iii) கல்விக் கொள்கை போது 'முயற்சியாண்மை' மற்றும் 'மனித போதனம்' ஆகியவற்றை ஊக்குவிப்பதில் உயர்நிலை கவனம் செலுத்தப்படுவதேன்? பொருளியல் ரீதியில் விளக்குக. (04 புள்ளிகள)

(iv) சுதந்திர சந்தைப் பொருளாதாரமானது கட்டளைப் பொருளாதாரத்தில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(v) A மற்றும் B ஆகிய நாடுகளுடன் தொடர்புடைய உற்பத்தி இயல்தகவு வளையிகள் கீழே தரப்படுகின்றன.




A நாட்டின் உற்பத்தி இயல்தகவு வளையி




B நாட்டின் உற்பத்தி இயல்தகவு வளையி

(அ) A மற்றும் B நாடு எதிர்நோக்கும் அமையச்செலவுகளின் தன்மைகளைக் கூறுக. (04 புள்ளிகள்)

(ஆ) மேலுள்ளவாறான அமையச் செலவு நிலைமைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? (04 புள்ளிகள்)

02

(i) ஒரு பண்டத்தின் ‘நிரம்பல்’ மற்றும் ‘நிரம்பல் தொகை’ என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) ஏனைய காரணிகள் மாறா நிலையில் சாதாரண பண்டத்தினதும் மற்றும் கிபன் பண்டத்தினதும் விலை மாறுமாயின் கேள்வித் தொகை மாற்றமடையும் விதத்தை பதிலீட்டு விளைவு வருமான விளைவு என்பவற்றின் ஊடாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மேலிருந்து கீழாக சரிந்து செல்லும் கேள்வி கேள்வி வளையிகள் மீது கீழ்நோக்கி அசைந்து செல்லும் போது விலைக் கேள்வி நெகிழ்ச்சி மாற்றமுறும் விதத்தையும் அதன்படி நிறுவனத்தின் வருவாயில் ஏற்படும் மாற்றத்தையும் வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) வருமானக் கேள்வி நெகிழ்ச்சி எண்ணக்கருவைப் பயன்படுத்தி சாதாரண பண்டம் இழிவுப்பண்டம் மற்றும் ஆடம்பரப் பொருள் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)

(v) போட்டிச் சந்தையொன்று சமநிலையடையும் போது கட்டாயமாக அவதானிக்கப்படக்கூடிய பண்புகள் யாவை? (04 புள்ளிகள்)

03

(i) ஒரு குறித்த பண்டத்தின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளுடன் தொடர்புடைய சமன்பாடுகள் கீழ் தரப்பட்டுள்ளன.

$QD = 700 - 5p$ $QS = -200 + 10p$

(அ) மேற்படி பண்டத்தின் மீது 6 ரூபா அலகு வரியொன்றை விதித்தால் புதிய சமநிலை விலையையும் தொகையையும் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) வரியின் காரணமாக ஏற்படும் மீளமுடியா நலன் இழப்பை (deadweight loss) கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) இப்பண்டத்தின் மீது ரூபா 80 குறைந்த பட்ச விலை விதித்து மிகை நிரம்பலை அரசாங்கம் கொள்வனவு செய்யுமாயின்,

(அ) மிகை நிரம்பலை அரசாங்கம் கொள்வனவு செய்த பின்னர் நுகர்வோர் மிகையில் ஏற்படும் மாற்றத்தைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) சமூக நலனில் மொத்தமாக ஏற்படும் மாற்றத்தை கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) விவசாய விளைபொருட்களின் விலைகள் அடிக்கடி தளம்பலுக்குள்ளாகும். விலை உறுதிப்பாட்டை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நான்கினைக் கூறுக. (04 புள்ளிகள்)

04

(i) தனது சொந்த வீட்டின் ஒரு பகுதியில் தனது சொந்த மூலதனத்தைப் பயன்படுத்தி நடத்திச் செல்லப்படும் ஒரு சில்லறைக் கடையின் நேர்ச்செலவுகள் இரண்டையும் நேரில் செலவுகள் இரண்டையும் கூறுக. (04 புள்ளிகள்)

(ii) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்பதனால் கருதப்படுவதென்ன? நீண்ட கால உற்பத்திச் செயற்பாட்டில் குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி ஏன் தொழிற்படுவதில்லை என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இயற்கைத் தனியுரிமை என்னும் எண்ணக்கருவை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) நிறைப்போட்டி சந்தையின் நிரம்பல் வளையியில் இருந்து நிறுவனம் ஒன்றின் நிரம்பல் வளையியானது பெறப்படுவது எவ்வாறு என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) ஒரு நிறைபோட்டிச் சந்தையில் ஒரு மாம்பழத்தின் விலை 50 ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சந்தையில் உள்ள ஒரு நிரம்பலாளன் பற்றிய ஒரு வாரத்திற்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

உற்பத்தி செய்யப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை : 250
மொத்த மாறும் செலவு : 6250 ரூபா
மொத்த நிலையான செலவு : 4750 ரூபா

(அ) ஒரு மாம்பழத்தின் சராசரி மொத்தச் செலவைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ஆ) வாரமொன்றில் நிரம்பலாளனின் இலாபம் யாது? (02 புள்ளிகள்)
(இ) நிலவும் செலவு நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படாதாயின் இந்நிறுவனத்தை முடிவிடும் தீர்மானம் எந்த விலைக்கு கீழாக விலை குறையும் போது மேற்கொள்ளப்படும்? (02 புள்ளிகள்)

05

(i) பின்வரும் நிகழ்வுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியை எவ்வாறு பாதிக்கும்? உமது விடையை விளக்குக.
(அ) அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரித்தல்.
(ஆ)மத்திய அரசாங்கத்தின் நிதியில் நாடு முழுவதும் நூறு மீன்பிடித் துறைமுகங்களை உருவாக்குதல்.
(இ) மக்கள் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தல்.
(ஈ) முன்னைா வருடங்களில் கொள்வனவு செய்த மோட்டார் வண்டிகளை இவ்வருடத்தில் மற்றுமொருவருக்கு விற்பனை செய்தல். (04 புள்ளிகள்)

(ii) கீழே தரப்படும் நிறுவனங்கள் எத்தகைய நிறுவனக் கட்டமைப்புக்குள் உள்ளடக்கப்படும்?
(அ) மக்கள் வங்கி
(ஆ) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்
(இ) இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
(ஈ) லயன்ஸ் கிளப் (04 புள்ளிகள்)

(iii) தேசியக் கணக்குகளை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் கூறுக. (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதார மாறிகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

$C = 500 + 0.8\ Yd$  $I = 600$  $G = 400$  $T = 200$  $Tr = 60$

(எல்லா இலக்கங்களும் பில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன)
(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானத்தின் அளவு யாது? (02 புள்ளிகள்)
(ஆ) வரிப் பெருக்கியினதும் அரசாங்க செலவீட்டுப் பெருக்கியினதும் பெறுமதி யாவை? (02 புள்ளிகள்)
(இ) இப்பொருளாதாரத்தின் சாத்திய வெளிப்பாட்டின் மட்டம் ரூபா பில்லியன் 10000 ஆயின் அம்மட்டத்தை அடைய அரசாங்க செலவீடு எந்த அளவினால் மாற்றமடைய வேண்டும்? (02 புள்ளிகள்)

(v) நுகர்வுச் சார்பில் உள்ள a மற்றும் byd ஆகிய மாறிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

## பகுதி ‘ஆ’

## (இந்தப் பகுதியிலிருந்து குறைந்தது 02 வினாக்களைத் தேர்ந்தெடுக்கவும்)

06

(i) அண்மிய பணம் மற்றும் பணப்பதிலீடுகளை உதாரணங்கள் கூறி விளக்குக.
(04 புள்ளிகள்)

(ii) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் விசேட பண்புகள் நாக்கினைக் கூறுக. (04 புள்ளிகள்)

(iii) ஒதுக்குப் பணம் மற்றும் பணப்பெருக்கி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி ஒரு நாட்டின் ஒதுக்குப் பணத்தின் அளவினைத் தீர்மானிக்கும் காரணிகளைக் கூறுக.
(04 புள்ளிகள்)

(iv) இதுவரை காலமும் பின்பற்றப்பட்ட இரட்டைக் கொள்கை வட்டி வீத முறைமையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீத முறைமைக்கு மாறுவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது.
(அ) மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள்ள பிரதானப் பணக் கொள்கைக் கருவி யாது?
(01 புள்ளி)
(ஆ) கொள்கை வட்டி வீதத்தின ஊடாக பணநிரம்பலை விரிவாக்குவது எவ்வாறு?
(03 புள்ளிகள்)

(v) ஒரு வணிக வங்கி முறைமையினுள் 5000 மில்லியன் வைப்புக்கள் காணப்பட்டன. இதில் 1000 மில்லியன் ஒதுக்காக பேணவும் 1500 மில்லியன் பிணையங்களைக் கொள்வனவு செய்யவும் 2500 மில்லியன் கடன் வழங்கவும் பயன்படுத்தப்பட்டன. மத்திய வங்கியின் நியதி ஒதுக்கு வீதம் 10 % ஆகும்.
(அ) இவ்வங்கிக் கட்டமைப்பு மிகை ஒதுக்குகள் பூச்சியமாகும் வரை கடன் விரிவாக்கத்தை மேற்கொள்ளுமாயின் புதிதாக வழங்கப்படக்கூடிய கடனின் உச்ச அளவு யாது? (02 புள்ளிகள்)
(ஆ) புதிதாக கடன் வழங்கப்பட்ட பின்னர் வங்கி முறைமையின் ஐந்தொகையை உருவாக்குக. (03 புள்ளிகள்)

07

(i) சந்தை முறைமையானது ‘சுகாதார சேவையை’ வழங்குவதற்கும் ‘தேசிய பாதுகாப்பு சேவையை’ வழங்காமைக்கும் சமிஞ்ஞை வழங்குவது ஏன் என விளக்குக.
(04 புள்ளிகள்)

(ii) ‘சந்தைத் தோல்வியை சீராக்கும் பொருட்டு அரசாங்கம் மேற்கொள்ளும் சில தலையீடுகளுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு உருவாகும் சந்தர்ப்பங்களை பெரும்பாலும் காண முடிகிறது’ இக்கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) பின்வரும் எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கூறுக.
(அ) விருத்தி முறை வரியும் குறைந்து செல்லும் வரியும்
(ஆ) வட்ட ரீதியான வரிச்சுமை பொருளியல் வரிச்சுமை (04 புள்ளிகள்)

(iv) பாதீட்டுக் குறைநிலையை பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் பயன்படுத்தும் கருவிகளும் வழிமுறைகளும் யாவை? (04 புள்ளிகள்)

(v) அரச வருவாயை அதிகரிக்க 2025 இல் முன்மொழியப்பட்ட முன்மொழிகள் யாவை?
(04 புள்ளிகள்)

08

எல்லா வளங்களையும் பயன்படுத்தி அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் புடைவை மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றை உற்பத்தி ஆற்றல் பின்வருமாறு தரப்படுகிறது.

| நாடு | புடைவை உற்பத்தி (அலகுகள்) | தொலைக்காட்சி உற்பத்தி (அலகு) |
|---|---|---|
| அமெரிக்கா | 10000 | 10000 |
| ஜப்பான் | 20000 | 10000 |

(i) மேற்படி தகவல்களின் படி ஒவ்வொரு நாட்டிலும் புடைவை மற்றும் தொலைக்காட்சி ஆகிய பொருட்களில் சிறக்குமியல்பு அடையக் கூடியவை யாவை? (04 புள்ளிகள்)

(ii) சிறக்குமியல்பின் பின்னர் இரு நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுபடுவதாகக் கருதுக. இந்நாடுகளின் நுகர்வு இயல்தகவு வளையிகள் அவற்றின் ஒற்பத்தி இயல்தகவு வளையிகளை விட உயர்வாக இருப்பதை வரைபடங்கள் மூலம் காட்டுக. இதன்போது அமெரிக்கா 5000 தொலைக்காட்சிகளை ஏற்றுமதி செய்து புடைவை 8000 அலகுகளை இறக்குமதி செய்வதாகக் கொள்க. (06 புள்ளிகள்)

(iii) இலங்கை நிகழ்காலத்தில் பேணிச் செல்லும் பிராந்திய மற்றும் இருபக்க தாராள வர்த்தக ஒப்பந்தங்கள் எவை? (04 புள்ளிகள்)

(iv) அமெரிக்க டொலரின் மூபாப் பெறுமதி தீர்மானிக்கப்படும் விதத்தை காட்டப் பொருத்தமான வரைபடத்தை வரைக. இவ்வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கேள்வி வளையி கீழ்நோக்கி சரிந்து செல்வதற்கும் சந்தை நிரம்பல் வளையி மேல் நோக்கிச் சரிந்து செல்வதற்கும் காரணம் என்னவென விளக்குக. (06 புள்ளிகள்)

9

(i) பொருளாதார அபிவிருத்திக்கும் பேண்தகு அபிவிருத்திக்கும் இடையிலான வேறுபாட்டைக் கூறுக. (04 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தியை அளவிடுவதில் மனித அபிவிருத்திச் சுட்டெண்ணின் பலம் மற்றும் பலவீனங்களை பரிசீலனை செய்க. (04 புள்ளிகள்)

(iii) (அ) வறுமைக்கோடு மற்றும் குடித்தொகை வறுமை குறிகாட்டி இடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

(ஆ) பல்பரிமாண வறுமையை அளவிடுவதில் கவனத்திற்கொள்ளப்படும் பரிமாணங்களைக் கூறி அவற்றை அளவிட இலங்கை பயன்படுத்தும் குறிகாட்டிகள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) இலங்கையில் தொழில்புரியும் வயது குடித்தொகைக்கும் தொழிற்படைக்கும் இடையிலான சதவீதத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுவதென்ன? காணங்களை கூறி விளக்குக. (04 புள்ளிகள்)

(v) இலங்கையில் முதியோர் குடித்தொகைக்கான சமூக பாதுகாப்பு வலைப்பின்னல்கள் யாவை? அவ்வலைப்பின்னல்களில் குடித்தொகை கட்டமைப்பு மாற்றங்களால் ஏற்படும் சவால்கள் யாவை? (04 புள்ளிகள்)

(i) 2020 இல் ஆசியான் அமைப்பு மற்றும் அதன் வர்த்தகப் பங்காளர்களால் உருவாக்கப்படும் பிராந்திய விரிவாக்கப்பட்ட பொருளாதாரக் கூட்டாண்மையின் (RCEP) அங்கத்துவ நாடுகள் நான்கினைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கையில் உயர் போட்டித் தன்மை வாய்ந்த ஏற்றுமதியை நோக்கிய டிஜிட்டல் பொருளாதாரமாக மாற்றுவதை பிரதான இலக்காகக் கொண்ட பொருளாதார உருமாற்றச் சட்டத்தின் குறிக்கோள்கள் யாவை? (05 புள்ளிகள்)

(iii) சுதந்திரமடைந்து நூறாண்டுகளைப் பூர்த்தி செய்யும் போதாவது அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும் இலக்கினை அடைவதற்கு இலங்கை வெற்றி கொள்ள வேண்டியுள்ள சவால்கள் எவை? (05 புள்ளிகள்)

(iv) இலங்கை அரசாங்கம் (2025 - 2029) நடுத்தர காலப்பகுதியின் அரச நிதி கட்டமைப்பிற்கு ஏற்ப கடன் பேண்தகு தன்மையை பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ள அரசாங்க பொது நிதியியல் சீர்திருத்தங்கள் யாவை? (06 புள்ளிகள்)

Ministry of Education, Higher Education and Vocational Education

# கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை - 2025
# General Certificate of Education (Adv. Level) Examination 2025
## பயிற்சி வினாத்தாள் விடைகள்
## Practice Question Paper - Answers
### பொருளியல் II
### Economics II

1.

i.

நிலம்

- உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தப்படத்தக்க இயற்கையாகக் கிடைக்கும் யாவும் நிலம் எனப்படும்.
- மண், கனியவளம், நிலம், நீர் மூலாதாரங்கள் உதாரணங்களாகும்.
- சில இயற்கை வளங்கள் பயன்படுத்தும் போது குறைவடையும்.
- உற்பத்தி செயன்முறையில் நேரடியாக உள்ளீடாகப் பயன்படும்

இயற்கை மூலதனம்

- மனிதனின் நல்வாழ்க்கைக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்காகவும் அவசியமான சேவைகளை வழங்கும் சொத்துக்கள் மனித மூலதனமாகும்.
- காடுகள், ஈரநிலங்கள், கடல்கள், புல்வெளிகள், நீர்ச்சகரம், மேற்காவுகை, காலநிலை ஒழுங்குறுத்தல் போன்ற சுற்றாடல் கட்டமைப்புகள்
- தீர்ந்து போகாமல் இருப்பதுடன் புதுப்பிக்கத்தக்கதாக இருத்தல்.
- மனித இருப்பின் ஆதாரமாக அமைவனவாகும்.

(04 வேறுபாடுகளுக்கு 04 புள்ளிகள்)

ii. இல்லை

தெரிவுப் பிரச்சினை என்பது மாற்றுப் பயன்பாடுடைய வரையறைகுட்பட்ட வளங்களை பயன்படுத்தி எதனை, எந்தளவு, எவ்வாறு, யாருக்காக உற்பத்தி செய்வதென்பது பற்றி தீர்மானம் மேற்கொள்வது பற்றிய பிரச்சினையாகும்.

(01 புள்ளி)

தெரிவுப் பிரச்சனை தோன்றுவது வளங்கள் அருமையாக இருப்பதும், அருமையான வளங்கள் மாற்றுப் பயன்பாடுடையதாக இருப்பதும், மனித விருப்பங்கள் அளவற்றதாக இருப்பதுமாகும்.

(01 புள்ளி)

iii.

- முயற்சியாண்மையும் மனித மூலதனமும் ஒரு நாட்டின் மனித வளத்திரட்சியின் பகுதிகளாகும்.
- முயற்சியாண்மை என்பது பொருள்கள் சேவைகளின் உற்பத்தி குறித்த கொள்கைத் தீர்மானங்களை எடுத்தல், உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், இடர் ஏற்படல் போன்ற நடவடிக்கைகளாகும்.
- உற்பத்தி காரணிகளைிடையே மிக முக்கியமான காரணி முயற்சியாண்மை எனப்படும்.
- ஏனைய உற்பத்திக் காரணிகள் உற்பத்திச் செயன்முறையில் ஈடுபடுத்துவது தொடர்பான சகல தீர்மானங்களையும் முயற்சியாளனே எடுப்பான்.
- புதிய உற்பத்தி வாய்ப்புக்களை இனங்காணல் புதிய உற்பத்திமுறைகளை கண்டுபிடித்தல், புதிய சந்தை வாய்ப்புக்களை அறிமுகப்படுத்தல் என்பவற்றுக்கு முயற்சியாண்மை முக்கியமானது.
- முயற்சியாளன் காப்புறுதி செய்ய முடியாத இடரபாயத்தை தாங்குவதால் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய சமூகத்தை உருவாக்குவதற்கு பாடசாலை மட்டத்திலிருந்து பயிற்சி வழங்குவது முக்கியமானதாகையால் கல்விக் கொள்கைகள் வகுத்தலின் போது முயற்சியாண்மை ஊக்குவிப்பு ஒரு பிரதான குறிக்கோளாகிறது.
- வரைபின் உற்பத்தித்திறனை விருத்தி செய்யவில்லை தொழிற்படையின் அறிவு, அனுபவம் மற்றும் திறன்கள் மனித மூலதனம் எனப்படும்.

- ஊழியத்தை இலக்காகக் கொண்ட முதலீடுகள் ஆகிய கல்வி, போசணை, சுகாதாரம், தொழிற்பயிற்சி, புத்தாக்கங்கள் மூலம் மனித மூலதனம் உருவாகும்.
- உழைப்பைவிட கூடிய உற்பத்தி திறனை மனித மூலதனம் கொண்டிருக்கும்.
- மனித மூலதனம் அதிகரிப்பதன் காரணமாக நாட்டின் வளத்திரட்சியும் உற்பத்தித்திறன் இரண்டும் அதிகரிக்கும் அதே வேளை சாத்திய உற்பத்தி ஆற்றல் அதிகரித்து உற்பத்தி இயல்தகவு வளையி வலது புறம் நகர்வதுடன் பொருளாதார வளர்ச்சி துரிதப்படுத்தப்படும்.
- தனிநபரின் வாழ்க்கை தரம் உயர்வதற்கு மனித மூலதனமும் காரணமாகும். இதனால் மனித மூலதன ஊக்குவிப்பு கல்வி கொள்கைகளை வகுப்பது முக்கிய குறிக்கோளாகிறது.

(ஏதேனும் 2 காரணங்களுக்கு 02 புள்ளிகள்)

iv.

| சாதாரண முயற்சி பொருளாதாரம் | கட்டளைப் பொருளாதாரம் |
|---|---|
| • தனியார் சொத்துரிமை | • பொதுச்சொத்துரிமை |
| • தனியார் தொழில் பயிற்சி | • அரசு தொழில் முயற்சி |
| • விலை பொறிமுறை ஊடாக அடிப்படை பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வு | • சமூக நல நோக்கம் |
| • அரச தலையீடின்மை | • திட்டமிடல் பொறிமுறை மூலம் அடிப்படை பொருளாதார பிரச்சனைகள் தீர்க்கப்படல் |
| • பன்முகப்படுத்தப்பட்ட தீர்மானங்கள் அல்லது போட்டித் தன்மை நிலவும் | • அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புகள் |
| | • அரச தலையீடு அல்லது கட்டளைகள் விரிவாக்கம் |
| | • மத்திய தீர்மானம் எடுத்தல் அல்லது போட்டித் தன்மையில்லை |

(4 வேறுபாடுகளுக்கு 04 புள்ளிகள்)

v. அ. $A$ நாட்டிற்கு நிலையான அமையச் செலவு நிலை ஏற்படும்
$B$ நாட்டிற்கு அதிகரிக்கும் அமையச் செலவு நிலை ஏற்படும்

i. ள்ளிகள்)


ஆ.

| நிலையான அமையச் செலவு ஏற்படக் காரணம் | கூடிச்செல்லும் அமையச் செலவு ஏற்படக் காரணம் |
|---|---|
| • உற்பத்தி வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவையாக இருத்தல் | • உற்பத்தி வளங்கள் பல்லின தன்மை கொண்டதாக இருத்தல் |
| • ஒரு காரணிக்காக மற்றொரு காரணியை பூரணமாக பதிலீடு செய்ய முடிதல் | • காரணி பதிலீட்டை பூரணமாக மேற்கொள்ள முடியாதிருத்தல் |
| • இரு பொருள் வகைகளையும் ஒரே தொழில்நுட்பத்தில் உற்பத்தி செய்ய முடிதல் | • இரு பொருள்களையும் உற்பத்தி செய்யப் பயன்படும் தொழில்நுட்பம் வேறுபடல் |

(02 புள்ளிகள் வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)

2.

i. ஒரு பொருளின் நிரம்பலலை தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறா நிலையில் சந்தையில் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் கருதப்படும் பொருளுக்கு நிலவும் வெவ்வேறு விலைகளின் கீழ் சந்தையில் உள்ள நுகர்வோர்களால் நிரம்பல் செய்ய எதிர்பார்க்கும் தொகைகளாகும் நிரம்பல் வளையியின் எல்லா புள்ளிகளின் மூலம் காட்டப்படுவது நிரம்பல் ஆகும். (02 புள்ளிகள்)





ஒரு பொருளின் நிரம்பல் மீது செல்வாக்கு செலுத்தும் ஏனைய காரணிகள் மாறா நிலையில் குறித்த ஒரு விலையில் சந்தையில் உள்ள நிரம்பலாளர்களால் நிரம்பல் செய்ய எதிர்பார்க்கப்படும் தொகை நிரம்பல் தொகையாகும். நிரம்பல் வளையியின் மீதுள்ள ஒரு புள்ளியின் மூலம் காட்டப்படுவது நிரம்பல் தொகையாகும். (02 புள்ளிகள்)

ii. கேள்வியை தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாற நிலையில் கருதப்படும் பொருளின் விலை மாற்றத்திற்கும் கேள்வித்தொகை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பானது சாதாரண பொருள் தொடர்பில் எதிர்க்கணிய ரீதியானதாகவும் கிபன் பொருள் தொடர்பில் நேர்கணிய ரீதியானதாகவும் செயற்படும். இதற்குக் காரணம் இவ்விரு வகை பொருள்களினதும் பதிலீட்டு விளைவு விலை மாற்றம் அடையும் திசைக்கு எதிர் திசையில் மாற்றமடைந்த போதிலும் ஒரு சாதாரண பொருளின் வருமான விளைவானது விலை மாற்றம் அடையும் திசைக்கு எதிர் திசையில் செயல்படுவதும் கிபன் பொருள் தொடர்பில் வருமான விளைவு விலை மாறும் திசையிலேயே செயல்படுவதுமாகும்.

(02 புள்ளிகள்)

ஏனைய காரணிகள் மாறா நிலையில் சாதாரண பொருளின் விலை அதிகரித்தால் அதன் சார்பு விளையும் அதிகரிக்கும் அதன் போது கருதப்படும் பொருளின் வாடிக்கையாளர்கள் வேறு பதிலீடுகளை நோக்கி நகர்வர். இதனால் பதிலீட்டு விளைவின் தாக்கத்தினால் கேள்வித்தொகை வீழ்ச்சி அடையும். விலை அதிகரிப்பதனால் பதிலீட்டு விளைவினால் கேள்வித் தொகையில் ஏற்படும் வீழ்ச்சியை மேவி சென்று வருமான விளைவின் செல்வாக்கு காரணமாக கேள்வித்தொகை அதிகரிப்பதனால் கிபன் பொருளின் விலைக்கும் அதன் கேள்வித்தொகைக்கும் இடையில் நேர்கண்ணிய தொடர்பு ஏற்படும்.

(01 புள்ளி)




iii. மேலிருந்து கீழாகச் சரிந்து செல்லும் கேள்வி வளையின் மீது கீழ்நோக்கிச் செல்லும் போது கேள்வியின் விலை புள்ளி நெகிழ்ச்சி முடிவிலியிலிருந்து பூச்சியப் பெறுமதியை நோக்கி குறைவடையும். இதற்கு காரணம் நெகிழ்ச்சி கணிப்பிடப்படும் ஒவ்வொரு புள்ளியிலும் கேள்வி வளையின் சரிவின் தலைகீழ் பெறுமதி $\frac{\Delta QD}{\Delta P}$ மாறாதிருப்பினும் புள்ளிக்கு புள்ளி விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையிலான சதவீதம் குறைவடைந்து செல்வதாகும்.

(01 புள்ளி)

கேள்வி வளையியின் மீது கீழ்நோக்கி அசையும் போது விலையின் புள்ளி கேள்வி நிகழ்ச்சியில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப விற்பனையாளனின் வருவாயும் மாற்றமடையும்.

கேள்வி வளையியின் நடுப்புள்ளிக்கு மேல் உள்ள பிரதேசத்தில் விலை கேள்வி ஒன்றுக்கு கூடுதலாக அதாவது நெகிழ்வுள்ள கேள்வியாக காணப்படும். இதனால் விலை குறைவடையும் போது விற்பனையாளன் வருவாய் அதிகரித்துச் செல்லும் அதாவது விலை மாற்றத்திற்கும் விற்பனை வருமானத்திற்கும் இடையில் எதிர்கணிய தொடர்பு நிலவும்.

கேள்வி வலையின் நடுப்புள்ளிக்கு கீழுள்ள பிரதேசத்தில் விலை கேள்வி நிகழ்ச்சி ஒன்றை விட குறைவான பெறுமதியை கொண்டிருக்கும் அதாவது கேள்வி விலை நிகழ்வு உள்ளதாக காணப்படும். இதனால் விலை வீழ்ச்சி அடையும் போது விற்பனை வருவாயும் வீழ்ச்சி அடையும். அதாவது விலை மாற்றத்திற்கும் விற்பனை வருவாய்க்கும் இடையில் நேர்கணிய தொடர்பு காணப்படும்.

கேள்வி விலையின் நடுப்புள்ளியில் விலை கேள்வி நிகழ்ச்சி ஒன்றுக்கு சமனாகையால் விற்பனை வருவாய் உச்சத்தில் இருக்கும்

(02 ள்ளிகள்)

iv.

- வருமான கேள்வி நெகழ்ச்சி நேர்க்கணிய பெறுமதியை எடுப்பது வருமானத்திற்கும் கருதப்படும் பொருளின் கேள்விக்கும் இடையில் நேர்கணிய தொடர்பு காணப்படும் சாதாரண பொருள் தொடர்பிலாகும்.
- வருமான கேள்வி நெகழ்ச்சி நேர்க்கணிய பெறுமதியை எடுக்கும் போது அதன் பெறுமதி ஒன்றை விட கூடுதலாயின் அது ஒரு ஆடம்பரப் பொருளாகும்.
- வருமான கேள்வி நெகழ்ச்சி நேர்கணியப் பெறுமதியை எடுக்கும் போது அதன் பெறுமதி ஒன்றை விட குறைவாயின் அல்லது பூச்சியமாயின் அது அத்தியாவசிய பொருளாகும்.

- வருமானக் கேள்வி நெகழ்ச்சி எதிர்க்கணிய பெறுமதியை எடுக்குமாயின் வருமானத்திற்கும் கருதப்படும் பொருளின் கேள்விக்கும் இடையில் எதிர் தொடர்பு காணப்படுவது இழிவு பொருள்கள் தொடர்பிலாகும்.

(ஒன்றிக்கு 01 புள்ளி நான்கிற்கு 04 புள்ளிகள்)

v.

- கேள்வி எழுப்ப எதிர்பார்க்கும் விலையும் நிரம்பல் செய்ய எதிர்பார்க்கும் விலையும் சமனாகும்.
- கேள்வி எழுப்ப எதிர்பார்க்கும் தொகையும் நிரம்பல் செய்ய எதிர்பார்க்கும் தொகையும் சமனாகும்.
- சமநிலை விலையின் கீழ் மிகை கேள்வி தொகையும் மிகை நிரம்பல் தொகையும் பூச்சியம் ஆகும்.
- சமநிலை தொகையின் கீழ் மிகை கேள்வி விலையும் மிகை நிரம்பல் விலையும் பூச்சியம் ஆகும்.
- சமநிலை விலை என் கீழ் நுகர்வோன் செலவிடும் விற்பனை வருவாயும் சமன் ஆகும்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி நான்கிற்கு 04 புள்ளிகள்)

3.


i. அ. வரிக்கு பின்னர் புதிய நிரம்பல் வளையி

$$Qs = -200 + 10P$$
$$Qs = -200(P - 6)$$
$$Qs = -200 + 10P - 60$$
$$Qs = -260 + 10P$$

$$QD = Qs$$
$$700 - 50P = -260 + 10P$$
$$700 + 260 = 10P + 5P$$
$$960 = 15P$$
$$P = \frac{960}{15} = 64$$

(02 புள்ளிகள்)

$$Qs = -260 + 10P$$
$$= -260 + 10 \times 64$$
$$= -260 + 640$$
$$= 380$$





(02 புள்ளிகள்)

ஆ. மீளமுடியா நலனிழப்பு $= \frac{(MB-MC)\times(Qo-Q1)}{2}$ (01 புள்ளி)

$= \frac{(64-58)\times(400-380)}{2}$ (01 புள்ளி)

$= \frac{6\times20}{2} = 60$ (02 புள்ளிகள்)




மாற்றீடான விடை

அ. நுகர்வோன் மிகைகளில்

ஏற்பட்ட மாற்றம் = பின்னர் நுகர்வோன் மிகை – முன்னர் நுகர்வோன் மிகை

(04 புள்ளிகள்)

ii.

- சுய பாதுகாப்பு கையிருப்புகளை பேணுதலும் வினியோகித்தலும்
- உத்தரவாத விலை விதித்து குறை நிரப்பு கொடுப்பனவு வழங்கல்.
- உற்பத்தி பங்கிட்டு முறையை அறிமுகப்படுத்தல்.
- நிலத்தை உற்பத்திக்கு பயன்படுத்தாவிட்டால் அதற்கு வரி செலுத்தல் மேற்கொள்ளல்.
- சந்தை பற்றிய தகவல்களை சரியாக முன்கூட்டியே வழங்கல்.
- ஏற்றுமதியாளர்களுக்கு மானியங்கள் வழங்கல்.

(03 புள்ளிகள்)

iii.

மொத்த நலனில் ஏற்பட்ட மாற்றம் = நுகர்வோன் மிகையில் ஏற்பட்ட மாற்றம் + உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம் – மானியத்தின் பொருட்பின் அரச செலவினம்

(01 புள்ளி)

$$= (-7000) + 1000 - 2400$$
$$= -21000$$

4.

i. நேரடி செலவுகள்

- விற்கும் பொருட்டு விலைக்கு வாங்கிய பொருளுக்கான செலவு
- மின்சார கட்டணம்
- நீர் கட்டணம்
- பெற்ற கடனுக்கான வட்டி செலுத்தல்

(ஏதாவது இரண்டிற்கு 02 புள்ளிகள்)

மறைமுக செலவுகள்

- இழக்கப்படும் வட்டி வருவாய்கள்
- சாதாரண இலாபம்
- இழக்கப்படும் வாடகை வருவாய்கள்
- இழக்கப்படும் சம்பளங்கள்

(ஏதாவது இரண்டிற்கு 02 புள்ளிகள்)

ii.

- குறைந்த செல்லும் விளைவு விதி என்பதால் கருதப்படுவது யாதெனில் ஒரு உற்பத்தி நிறுவனம் குறுங்காலத்தில் நிலையான உள்ளீடுகளுடன் மாறும் உள்ளீடுகளை மாத்திரம் மாற்றியமைத்து அதிகரிப்பதன் போது மாறும் உள்ளிட்டின் எல்லை மற்றும் சராசரி விலைதிறன் ஒரு கட்டத்திற்கு அப்பால் குறைந்து செல்வதாகும்

(02 புள்ளிகள்)

- குறைந்த செல்லும் எல்லை விளைவு விதி குறுங்கால உற்பத்தி செயல்முறையிலே காணப்படும். குறுங்கால உற்பத்தி செயல் முறையில் நிலையான உள்ளீடுகள் காணப்படுவதால் தேவையானவாறு உற்பத்தியுடன் தொடர்புபடும் எல்லா உள்ளீடுகளையும் மாற்றி அமைக்க முடியாது. அதன் போது மாறும் உள்ளீடுகளை சமமான வீதத்தில் அதிகரிக்கும் போது மாறும் உள்ளிட்டின் ஓர் அலகின் மீது சேரும் நிலையான உள்ளீட்டின் அளவு படிப்படியாக குறைவடைவதால் மாறும் காரணியின் வினைத்திறன் குறைவடைவதால் குறைந்து செல்லும் விளைவு விதி தொழிற்படும்.

(01 புள்ளி)

- நீண்ட காலத்தில் எல்லா உள்ளீடுகளும் மாறும் உள்ளீடுகளாக மாறும். அதன் போது குறுங்காலத்தில் நிலையாக கருதப்பட்ட உள்ளீடுகளையும் தேவையான வீதத்தில் அதிகரிக்க முடியும் இதனால் நீண்ட கால உற்பத்தி செயல்முறை குறைந்து செல்லும் விளைவு விதிக்கு உட்படாது.

(01 புள்ளி)

iii.

- ஒரு குறிப்பிட்ட கைத்தொழிலில் உள்ள நிறுவனங்கள் இரண்டு அல்லது அதைவிட கூடுதலான எண்ணிக்கையில் உள்ளவை நிரம்பல் செய்யும் விலையை விட குறைவான விலையில் முழு சந்தைக்கும் தேவையான நிரம்பலை மேற்கொள்ள முடியுமானின் அந்த நிறுவனம் இயற்கை தனி உரிமையாக மாறும்.
- இந்நிறுவனம் கூடிச்செல்லும் அளவு திட்ட சிக்கனங்களை அனுபவிப்பதால் உற்பத்தியை அதிகரிக்கும்போது நீண்டகால சராசரி செலவு குறைவடையும். இதனால் ஏனைய போட்டியாளர்களுக்கு இச்சந்தையில் நிலைத்து இருப்பது கடினமாகும். இதனால் இயற்கையாக நிறுவனம் தனியுரிமையாக மாறும்.

(02 புள்ளிகள்)

iv.

- நிறைபோட்டி நிறுவனங்கள் யாவற்றினதும் தனிப்பட்ட நிரம்பல் வளையிகளின் கிடை அச்சு கூட்டுத்தொகையின் மூலம் சந்தை நிறங்கள் வளையி ஏற்படும்.

(01 புள்ளி)


- ஒரு நிறைப்போட்டு நிறுவணம் இலாபத்தை உச்சப்படுத்தும் அல்லது நட்டத்தை இழிவுபடுத்தும் வெளியீட்டு தொகையானது எல்லை செலவு எல்லை வருவாய்க்கு சமப்படும் வெளியீட்டுத் தொகையை உற்பத்தி செய்வதன் மூலம் இதனை அடையும் இதனால் நிறைப்போட்டியின் நிரம்பல் வளையியானது சராசரி மாறும் செலவு வளையின் இழிவு புள்ளிக்கு மேலுள்ள எல்லைச் செலவு வளையியின் ஒரு பகுதியே ஆகும்.

(01 புள்ளி)

- தொழிலின் நிரம்பல் வளையியானது ஒவ்வொரு நிறுவனத்தினதும் இயலளவு மாறாத நிலையில் இருக்கும்போது வெவ்வேறு விலைகளில் ஒவ்வொரு நிறுவனமும் நிரம்பல் செய்யும் தொகைகளை காட்டும் ஒரு தரப்பட்ட விலையில் கைத்தொழில் நிரம்பல் செய்யும் தொகையானது அவ் விலையில் ஒவ்வொரு நிறுவனமும் நிரம்பல் செய்யும் தொகைகளின் மொத்த கூட்டுத்தொகை ஆகும்.இதனால் ஒவ்வொரு நிறுவனத்தினதும் சராசரி மாறும் செலவு வளையியின் இழிவு புள்ளிக்கு மேலுள்ள எல்லைச் செலவு வளையிகளின் கிடையச்சு தொகைகளை கூட்டினால் கைத்தொழிலின் நிரம்பல் வளையியினால் பெறலாம்.

உதாரணம்

*A*




நிறுவனத்தின் நிரம்பல் வளையி　　*B* நிறுவனத்தின் நிரம்பல் வளையி　　சந்தையின் நிரம்பல் வளையி

v. அ. மாம்பழம் ஒன்றின் சராசரி மொத்த செலவு

$$= \frac{6250 + 4750}{250}$$

$$= 44 \text{ ரூபா}$$

(02 ள்ளிகள்)

ஆ. மொத்த வருவாய்

$50 \times 250 = 12500$

(-)மொத்த செலவு $= 11000$

வாரத்தின் மொத்த இலாபம் $= 1500$ரூபா

(03 ள்ளிகள்)

இ. ஒரு மாம்பழத்தின் விலை சராசரி மாறும் செலவின் இழிவு புள்ளிக்கு கீழாக குறைந்தால் மட்டுமே மாம்பழ வியாபாரத்தை நிறுத்த வேண்டும்.

5.

i. அ. மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் அரச ஊழியர்களின் சம்பளங்கள் பொருள்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு அரசு மேற்கொள்ளும் செலவுகள் ஆகும் அது அதிகரிக்கும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்.

ஆ. புதிய மீன் பிடித்துறை முகத்தை அமைத்தல் செலவுகள் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தை ஏற்படுத்தும் செலவுகள் ஆகும் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் அதிகரிக்கும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்.

இ. பொதுமக்கள் திரைச்சேரி உண்டியல்களை கொள்வனவு செய்வது வெளிப்படையாக ஒரு நிதிச் செலவாகும் அது உற்பத்தி திறன் உள்ள செலவில்லா வெளியீட்டை மேற்கொள்ளக்கூடிய ஒரு சிலவன்று இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் செல்வாக்கு செலுத்தாது.

ஈ. முன்னையா ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் நடப்பு வருடத்தில் வேறொரு நபருக்கு விற்கப்பட உற்பத்தி வரம்பினுள் உள்ளடக்கப்படும் ஒரு செயற்பாடு அல்ல இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

(04 புள்ளிகள்)

ii.

அ. நிதி கூட்டுத் தாவனத்துறை சார்ந்த ஒரு நிறுவனம் ஆகும்

ஆ. நிதி அல்லா கூட்டுத்தாபன துறை சார்ந்த ஒரு நிறுவனம் ஆகும்.

இ. அரச துறை சார்ந்த ஒரு நிறுவனம் ஆகும்

ஈ. இலாப நோக்கற்ற வீட்டுத்துறைக்கு சேவை வழங்கும் ஒரு நிறுவனம் ஆகும்

(04 புள்ளிகள்)

iii.

- ஒரு பொருளாதாரத்தின் செயலாற்றத்தை அளவிடலாம்.
- பொருளாதார வளர்ச்சியை அளவிடலாம்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி கட்டமைப்பு மற்றும் அதில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி விபரிக்கலாம்.
- தலைக்குரிய தனிநபர் தேசிய வருமானம் போன்ற அளவைகள் ஊடாக நாடுகள் இடையே தனிநபர்களின் வாழ்க்கைத் தரத்தை அளவிட்டு ஒப்பிடலாம்.
- மொத்த உள்நாட்டு சேமிப்பு மொத்த தேசிய சேமிப்பு ஆகியவற்றை மதிப்பிடலாம்.
- செலவிடத்தக்க தேசிய வருமானம் நுகர்வு என்பவற்றுக் கிடையிலான தொடர்புகள் மற்றும் செலவிடத்தக்க தேசிய வருமானம் சேமிப்பு என்பவற்றுக்கு இடையிலான தொழில்பாட்டு ரீதியான தொடர்புகளை மதிப்பீடு செய்யலாம்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவுகளின் உட்கட்டமைப்பை விளங்கிக் கொள்ளலாம் அதன் மூலம் எதிர்கால பொருளாதார முன்னேற்றத்தை எதிர்வு கூறலாம்.
- தேசிய வருமானத்தின் கூறுகளை பற்றிய அறிவை பெற்றுக் கொள்ளலாம்.
- எதிர்கால பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தல் மற்றும் திட்டமிடலின் போது பெருக்கி போன்ற கருவிகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

(ஏதேனும் இரு விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

iv. அ. $Y = E$

$Y = C + E + G$

$Y = 500 + 0.8Yd + 600 + 400$

$Y = 500 + 0.8(Y + TR - T) + 600 + 400$ (01 புள்ளி)

$Y = 500 + 0.8(Y + 60 - 200) + 1000$

$Y = 1500 + 0.8(Y - 140)$

$Y = 1500 + 0.8Y - 112$

$Y - 0.8Y = 1388$

$Y(1 - 0.8) = 1388$

$Y = \frac{1388}{1-0.8} = \frac{1388}{0.2}$

$Y = 6940$ (01 புள்ளி)

ஆ. $K_t = \frac{-b}{1-b} = \frac{-0.8}{1-0.8} = \frac{-0.8}{0.2} = -4$ (01 புள்ளி)

இ. $Y_P - Y_1$

$= 10000 - 6940$

$= 3060$

$K_g = \frac{\Delta Y}{\Delta G}$

$5 = \frac{3060}{\Delta G}$

$\frac{5\Delta G}{5} = \frac{3060}{5}$

$\Delta Q = 612$ (02 புள்ளிகள்)

தற்போதைய வெளியீட்டு மட்டத்தை சாத்திய வெளியீட்டு மட்டத்தை நோக்கி அவதானிக்க வேண்டுமாயின் அரசாங்க வெளியீடுகள் 612 ரூபாவினால் அதிகரிக்க வேண்டும்.

v. $a$ என்பது தன்னிச்சையான நுகர்வு செலவீடு ஆகும். அதாவது ஒரு நாட்டின் மக்களின் செலவிடத்தக்க வருமானம் பூச்சிய மட்டத்தில் இருப்பின் குறைந்தபட்ச நுகர்வு மட்டத்தை பேணி செல்ல அவசியமான நுகர்வு செலவீடு ஆகும் அது நுகர்வு சார்பின் வெட்டுத்துண்டாக இருக்கும்.

தன்னிச்சையான நுகர்வுக்கான சில வீட்டை மக்கள் தேவையான பணத்தை மாற்ற கொடுப்பனவுகள் மூலமாகவோ அல்லது கடந்த கால சேமிப்பிலிருந்து நிதியை மீளப் பெறுவதன் மூலம் இச்செலவை பூர்த்தி செய்ய நேரிடும்.

(02 புள்ளிகள்)

$bY$ என்பது தூண்டப்பட்ட நுகர்வாகும் அதாவது சமூகத்தின் மொத்த நுகர்வுச் செலவீட்டில் தன்னிச்சையான நுகர்வு செலவிற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் செலவிடும்.

$$C = a + bYd$$

$$bYd = C - a$$

$b$ என்பது எல்லை நுகர்வு நாட்டம் ஆகும். $b$ இனை $Yd$ இனால் பெருக்குவதன் மூலம் செலவிடத்தக்க வருமானத்தில் நுகர்வுக்காக செலவிடப்படும் அளவினை பெறலாம்.

(02 புள்ளிகள்)

6.

i. அந்நிய பணம் என்பது பரிமாற்று ஊடகமாக பணத்தின் பணியை செய்யாத ஆனால் பெருமானத்தை திரட்டாக தொழிற்படக்கூடிய நிதி சொத்துக்கள் ஆகும்.

(01 புள்ளி)

உதாரணம் சேமிப்பு வைப்புகள் நிலையான பைப்புகள் செலாவணி உண்டியல்கள் திரைச்சேரி உண்டியல்கள்.

(01 புள்ளி)

பணப்பதிலிடுகள் என்பது பெருமான திரட்டாக தொழிற்படாத ஆனால் தற்காலிக பரிமாற்று ஊடகமாக தொழிற்படும் ஊடகங்களாகும்

(01 புள்ளி)

உதாரணம் கடன் அட்டைகள் செலவு அட்டைகள்

(1 உதாரணம்)

ii. நுகர்வோர் விலை சுட்டெண்களின் பண்புகள்

| | தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் | கொழும்பு நுகர்வோன் விலை சுட்டெண் |
|---|---|---|
| அடிப்படை ஆண்டுக்குரிய புவியியல் பிரதேசம் | 2021 நாட்டின் சகல மாகாணங்கள் | 2021 கொழும்பு நகரின் சகல நகரப் பிரதேசம் |
| நிறையிடலுக்குப் பயன்படுத்தப்பட்ட அடிப்படை ஆண்டு | 2019 ஜனவரி- டிசம்பர் | 2019 ஜனவரி - டிசம்பர் |
| ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 3.7 | 3.8 |
| மாதாந்த சராசரி நுகர்வு செலவீடு | ரூ.50 728.60 | ரூ.91 880.34 |
| சுட்டெண்ணின் பெறுமதி | 507.29 | 918.80 |
| பிரதான பிரிவுகள் | 12 | 12 |
| உப பிரிவுகள் | 105 | 4105 |
| முழு வகைகளின் எண்ணிக்கை | 485 | 426 |
| மொத்த செலவின் சதவீதமாக உணவு | 39.22 | 26.23 |
| உணவல்லாதவை | 60.78 | 73.77 |
| விலை சேகரிக்கும் மத்திய நிலையங்கள் | மாவட்டத்திலுள்ள நகர் ஒன்றிலிருந்து மூன்று விற்பனை நிலையங்கள் | 10 |

(பண்புகளை ஒப்பிட்டு காட்ட 02 புள்ளிகள்)

- பரந்த புவியியல் பிரதேசத்தை கருத்தில் கொள்கிறது
- உள்ளடக்கப்படும் வகைகளின் எண்ணிக்கை அதிகம்
- நிறையிடலுக்கு பயன்படுத்தப்படும் சதவீதம் தர்க்கரீதியானது
- விலை சேகரிக்கும் அடிப்படை விரிவானது
- மாதத்திற்காக குடும்பத்தின் நுகர்வு செலவு மிகவும் சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்தப் படுகிறது

(விசேட பண்புகளை காட்ட 02 புள்ளிகள்)

iii.

- எல்லா பணக்கூற்றுக்களும் அடிப்படையை வழங்கும் வகையில் மத்திய வங்கியால் வெளியிடப்படும் சகல புழக்க பணங்களும் மத்திய வங்கியின் பண பொறுப்புகள் ஆகும். இவை அடிப்படை பணம் அல்லது ஒதுக்கு பணம் எனவும் அழைக்கப்படும்.
- மத்திய வங்கியால் வெளியிடப்படும் எல்லாப் புழக்க பணமும் இதில் உள்ளடங்கும்.
- மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள புழக்கப்படும் பல்வேறு தரப்பினரிடம் ஒதுக்குகளாக இருப்பதனால் அவ்வாறான ஒதுக்கப்பணம் யாவும் உயர் வலுப்பணத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

(01 புள்ளி)

- பணப்பெருக்கி என்பது பண நிரம்பலுக்கும் அடிப்படை பணத்திற்கும் இடையிலான சதவீதமாகும்.
  பணப்பெருக்கி = $\dfrac{\text{பண நிரம்பல்}}{\text{அடிப்படை பணம்}}$

(01 புள்ளி)

- ஒதுக்கப் பணத்தின் அளவை தீர்மானிக்கும் காரணிகள் இரண்டாகும்.
  1) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள்
  2) மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டு சொத்துக்கள்
- மத்திய வங்கி வணிக வங்கிகளிடமிருந்து அந்நிய செலாவணியை கொள்வனவு செய்யும் போது ஒதுக்குப்பணத்தின் அளவு அதிகரிக்கும்.
- மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கியுள்ள கடன்கள் அதிகரிக்கும் போது தேறிய உள்நாட்டு சொத்துக்கள் அதிகரித்து ஒதுக்கு பணத்தின் அளவு அதிகரிக்கும்.

(02 புள்ளிகள்)

iv. அ. ஒரு நாள் கொள்கை வட்டி வீதம்

(01 ள்ளி)

ஆ.

1) கொள்கை வட்டி வீதத்தை குறைப்பதன் மூலம் பண நிரம்பல் விரிவாக்கப்படும்.
2) கொள்கை வட்டி வீதத்தை குறைக்கும் போது தயார்நிலை கடன் வசதி விதமும் தயார் நிலை வைப்பு வசதி வீதமும் வீழ்ச்சி அடையும். அதன்போது வணிக வங்கிகள் வசமுள்ள ஒதுக்குகள் அதிகரிப்பதன் மூலம் வங்கிகள் வழங்கும் கடன்களின் அளவு அதிகரிக்கும் இது பண நிறமல் விரிவடைய காரணமாகும்.

(02 புள்ளிகள்)

v. அ. வங்கி முறைமையின் மிகை ஒதுக்குதல் = வங்கிகளில் கணக்கிடும் ஒதுக்குதல் - நியதி ஒதுக்கு தேவை அளவு

நியதி ஒதுக்கு தேவையின் அளவு = வைப்புகள் × நியதி ஒதுக்கு வீதம்

$$= 5000 \times \frac{10}{100} = 500$$

மிகை ஒதுக்குகள்

$$= 1000 - 500$$

$$= 500$$

புதிதாக கடன் வழங்கக்கூடிய உச்ச அளவு = மிகை ஒதுக்குதல் × வைப்பாக்க பெருக்கி

வைபாக்க பெருக்கி = 1/ நியதி ஒதுக்கு வீதம் $\frac{1}{r} = \frac{1}{\frac{1}{10}}$

வைப்பாக்கல் பெருக்கி $= 10$

புதிதாக வழங்கப்படக் கூடிய கடன்களின் உச்ச அளவு $= 500 \times 10$

$$= 5000$$

(02 புள்ளிகள்)

ஆ. புதிதாக கடன் வழங்கிய பின்னர் வங்கி முறைமையின் ஒன்றிணைந்த ஐந்தொகை

| பொறுப்புகள் ரூ.மில்லியன் | | சொத்துக்கள் ரூ.மில்லியன் | |
|---|---|---|---|
| வைப்புகள் | 10 000 | ஒதுக்குகள் | 1 000 |
| | | முறிகள் | 1 500 |
| | | கடன்கள் | 7 500 |
| | 10 000 | | 10 000 |

(03 புள்ளிகள்)

7.

i. சந்தை பொருளாதாரத்தில் தனியார் முயற்சியாளர்கள் தீர்மானம் எடுப்பதில் பிரதான உந்து சக்தியாக தொழிற்படுவது சுயநன்மையாகும். அதாவது ஒரு பொருளை அல்லது சேவையை நிரம்பல் செய்வதன் மூலம் இலாபம் உழைக்க முடியுமா இல்லையா என்பதாகும்.

(01 புள்ளி)

தேசிய பாதுகாப்பு என்பது பொதுப்பொருளாகும் கூட்டாக நுகரப்படுவதும் விலை செலுத்தாதோரை நுகர்விலிருந்து விளக்க முடியாமையும் பொது பொருள்களின் அடிப்படை பண்புகள் ஆகும். இதனால் இவற்றை சந்தை மூலம் நிரம்பல் செய்ய முடியாது. லாபத்தை நோக்காகக் கொண்ட உற்பத்தியில் ஈடுபடும் சந்தை நிரம்பலாளர்கள் அத்தகைய பொருள்களை நிரம்பல் செய்ய முன்வர மாட்டார்கள். இதனால் சந்தை முறைமையின் ஊடாக தேசிய பாதுகாப்பை நிரம்பல் செய்வதற்கான சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்படுவதில்லை.

(01 புள்ளி)

எவ்வாறாயினும் சுகாதார கேள்வி என்பது ஒரு மேன்மை பொருளாகும். அதாவது மேலதிக ஒரு நபருக்கு அதனை வழங்குவதற்கு அமைய செலவு ஒன்று ஏற்படுவதுடன் விலை செலுத்தாத ஒருவரை அதனை நுகர்வதில் இருந்து விலக்கி வைக்கக் கூடிய ஒரு தனியார் பொருளாகும். இதனால் அவ்வாறான பொருளுக்கு சந்தையில் ஒரு பெறுமதியை அளவிட முடிவதால் சந்தை முறைமையின் மூலம் சுகாதார சேவையை வழங்குவதற்கான சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்படும்.

(02 புள்ளிகள்)

ii. அரசாங்கம் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தும் தலையீடுகள் அரச துறையோடு தொடர்புபட்ட சில குறைபாடுகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை ஏற்படுத்தாமல் பொருளாதாரத்தில் மென்மேலும் வினைத்திறன் இன்மை சமத்துவமின்மை உறுதிபாடின்மை ஆகியவற்றை ஏற்படுத்தலாம். இதனால் அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் எதிர்ப்புகள் மேலெழலாம். இந்நிலையே அரசாங்கத்தின் தோல்வி எனப்படும்.

(01 புள்ளி)

அரசாங்கம் தோல்வியடைவது பின்வரும் காரணங்களால் ஆகும். உதாரணமாக,

- சரியான அல்லது பூரணமான தகவல்கள் கிடைக்க பெறாமை
- அரசியல் தலையீடுகள் அதிகரித்தல் (அரசியல் சுயநலம்)
- அதிகார வாதம் தலை தூக்குதல்
- வீண்விரயங்களுக்கு ஊழலும் தலைவிரித்தாடல்.
- சட்டதிட்டங்களும் ஒழுக்குறுத்தல்களும் கடுமையாக அல்லது அதிகமாக இருப்பதால் தீர்மானம் எடுத்தலில் ஏற்படும் காலதாமதங்கள்.
- சமூகத்தின் நோக்கங்களுக்கும் அரசாங்கத்தின் நோக்கங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் உருவாதல்.
- வாக்காளர்களால் எழுப்பப்படும் அழுத்தங்கள் காரணமாக பொருத்தமற்ற செலவுகள் மேற்கொள்ளப்படல்
- நீண்டகால நோக்கற்ற குறுங்கால செலவிடுகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.
- அரசாங்கத்தின் தலையீட்டின் காரணமாக ஊக்குவிப்புகள் பலவீனமாதல்
- நிர்வாக செலவுகள் அதிகரித்தல்

(ஏதேனும் 3 விடயங்களுக்கு 03 புள்ளிகள்)

iii.

அ. விருத்திமுறை என்பதனால் கருதப்படுவது யாதெனில் வரி அடிப்படை (வருமானம் அல்லது சொத்து) அதிகரிக்கும்போது சதவீதம் படிப்படியாக அதிகரிக்கும் முறைமையாகும் உதாரணம் தனிநபர் வருமான வரி

(01 புள்ளி)

குறைவடையும் வழிமுறை என்பதால் கருதப்படுவது யாதெனில் வரி அடிப்படை (வருமானம் அல்லது சொத்து) அதிகரிக்கும் போது வரிச் சதவீதம் படிப்படியாக குறைந்து செல்லும் முறைமையாகும். உதாரணம் உற்பத்தி வரி எனப்படும் கலால் வரி

ஆ. சட்டரீதியான வரி சுமை என்பது சட்டரீதியாக வரி செலுத்தும் சிலர் அதை செலுத்தும் வேளையில் நிதிசார் அடிப்படையில் தாங்கும் வரி சுமையாகும். உதாரணம் சிகரெட் உற்பத்தியாளர் ஒரு சிகரட்டுக்கு 100 ரூபாய் வீதம் அரசாங்கத்திற்கு வரிசெலுத்துதல்

(01 புள்ளி)

பொருளியல் வரி சுமை என்பது வரி பெயர்ச்சி செயல்முறையின் பின்னர் வரி செலுத்துபவரின் மெய் தனியார் வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சியாகும். உண்மையில் தாங்கல் பட வேண்டிய வரி சுமை பொருளாதார வளிச்சுமையே ஆகும்.

உதாரணம் வரியினால் சிகரெட் கொல்வனவு செய்ய அதிக விலையை செலுத்த நேரிடுமாயின் அதன் மூலம் கருதப்படுவது யாதெனில் உற்பத்தியாளர் வரிச்சுமையை நுகர்வோர் மீது பேரச் செய்துள்ளார் என்பதாகும் இதனால் வரி செலுத்துவோரின் மெய்வருமானம் வீழ்ச்சி அடையும்.

(01 புள்ளி)

iv. கடன் பெற பயன்படுத்தப்படும் கடன் கருவிகள்

- திறைச்சேரி உண்டியல்கள்
- திறைச்சேரி முறிகள்
- சர்வதேச இறைமை முறிகள்
- இலங்கை அபிவிருத்தி முறிகள்
- நிர்வாகக் கடன்கள்

(இரு கருவிகளுக்கு 2 புள்ளிகள்)

கடன் பெறப்படும் மூலாதாரங்கள்

- சந்தை கடன்கள்
  - மத்திய வங்கி
  - வணிக வங்கிகள்
- சந்தையல்லா கடன்கள்
- வங்கி அல்லாத சந்தை கடன்கள்
  - ஊழியர் சேமலாப நிதியம்
  - ஊழியர் நம்பிக்கை நிதியம்
  - தேசிய சேமிப்பு வங்கி
  - காப்புறுதி நிறுவனங்கள்
  - குத்தகை கம்பெனிகள்
  - தனியார் கம்பெனிகள்

(03 புள்ளிகள்)

v.

- 2025 ஆம் ஆண்டுக்கான வரி வருமான இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 13.9% ஆகும்
- சுமத்தப்பட்ட வாடகை வருமான வரி அறிமுகப்படுத்தப்பட்டமை
- டிஜிட்டல் சேவை வழங்குவதற்கு வெட் வரி அறிமுகப்படுத்தல்
- சேவை ஏற்றுமதிகளுக்கு 15% கம்பெனி வருமான வரியை அறிமுகப்படுத்தியமை
- சூதாட்டம் பந்தயம் புகையிலை மற்றும் மதுபான கைத்தொழில்களின் மீது கம்பெனி வருமான வரியை 40% இருந்து 45% ஆக அதிகரித்தமை .
- வட்டி வருமானங்கள் மீது பிடித்து வைத்தல் வரியை 5% இருந்து 10% ஆக அதிகரித்தமை.
- இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மீது உயர்ந்த இறக்குமதி தீர்வைகளை விதித்தல்

(ஐந்து மூலாதாரங்களுக்கு 5 புள்ளிகள்)

8.


i.

| | புடவை ஒரு அலகின் அமையச் செலவு | தொலைக்காட்சி ஒரு அலகின் அமையச் செலவு |
|---|---|---|
| அமெரிக்கா | 1 | 1 |
| ஜப்பான் | 0.5 | 2 |


புடைவை உற்பத்தியில் சிறப்பு இயல்பு ஜப்பான்
காரணம் அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் ஜப்பான் குறைந்த அமையச் செலவு கொண்டுள்ளது.
தொலைக்காட்சி உற்பத்தியில் சிறக்கும் இயல்பு ஐக்கிய அமெரிக்கா
காரணம் ஜப்பானுடன் ஒப்பிடுகையில் அமெரிக்கா குறைந்த அமையச் செலவு கொண்டுள்ளது.

(02 ள்ளிகள்)

ii.




02 புள்ளிகள்




02 புள்ளிகள்

மேலுள்ள உதாரணத்தின்படி அமெரிக்கா 1000 தொலைக்காட்சிகளை உற்பத்தி செய்து 5000 இனை உள்நாட்டு நுகர்வுக்கு வைத்துக்கொண்டு 5000 இனை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்து 3000 அலகுகள் இறக்குமதி செய்த பின்னர் நாட்டின் உற்பத்தி சாத்தியத்தை விட நாட்டின் நுகர்வு சாத்தியம் அதிகரித்துள்ளது.
ஜப்பான் 20000 அலகு புடவையை உற்பத்தி செய்து அதில் 12 ஆயிரம் அலகுகள் உள்நாட்டு நுகர்வுக்கு வைத்துக் கொண்டு 8000 அலகுகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து 5000 அலகு தொலைக்காட்சிகளை அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதி செய்த பின்னர் நாட்டின் உற்பத்தி சாத்தியத்தை விட நாட்டின் நுகர்வு சாத்தியம் அதிகரித்துள்ளது

(02 புள்ளிகள்)

iii. பிராந்திய தாராள வர்த்தக உடன்படிக்கைகள்

- தெற்காசிய தாராள வர்த்தக உடன்படிக்கைகள்
- தென்கிழக்காசிய தாராள வர்த்தக உடன்படிக்கை
- சார்க் பிராந்திய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை
- இந்து சமுத்திர வட்டகை பொருளாதார ஒத்துழைப்பு
- வங்காள விரிகுடா நாடுகளின் துறைசார் தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு


(02 புள்ளிகள்)

இருப்பதிவு தாராள வர்த்தக உடன்படிக்கைகள்

- இலங்கை இந்தியா தாராள வர்த்தக ஒப்பந்தம்
- பாகிஸ்தான் இலங்கை தாராள வர்த்தக ஒப்பந்தம்
- சிங்கப்பூர் இலங்கை தாராள வர்த்தக ஒப்பந்தம்
- தாய்லாந்து இலங்கை தாராள வர்த்தக ஒப்பந்தம்

(02 புள்ளிகள்)

iv. டொலரின் ரூபாய் பெருமதியானது நாணய மாற்று சந்தையில் டொலருக்கு நிலவும் கேள்வி மற்றும் அதன் நிரம்பலின் அதே படையிலாகும்.




(02 புள்ளிகள்)

- இங்கு டாலரின் கேள்வி வளையியினால் காட்டப்படுவது இறக்குமதிகள் வெளிநாட்டு பயணங்கள் வெளிநாட்டு முதலீட்டுக்கு தேவையான பொருத்தமான கேள்வியாகும்.
- தோழரின் ரூபாய் பெறுமதி குறையும் போது சார்பளவில் டொலர் மலிவாக மாறுவதனால் வதிவாளர்களின் கேள்வி அதிகரிக்கும். டாலரின் ரூபாய் பெறுமதி அதிகரிக்கும்போது பொருளின் சார்பு விலை அதிகரிப்பதனால் டொலருக்கான கேள்வி குறைவடையும். இதனால் டலருக்கான கேள்வி வளையி இடமிருந்து வலமாக மேலிருந்து கீழாக சரிந்து செல்லும்.

(02 புள்ளிகள்)

- நாணய மாற்று சந்தையில் டொலரின் நிரம்பல் வளையியினால் காட்டப்படுவது இலங்கையின் ஏற்றுமதிகள் இலங்கையில் முதலீடு செய்பவர்கள், இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகள் ஊடாக பெறப்படும் டொலரின் அளவாகும். டாலரின் ரூபாய் பெறுமதி அதிகரிக்கும்போது டாலர் நிரம்பலாளரிலிருந்து அது சார்பளவில் அனுகூலமாக இருப்பதனால் டொலர் நிரம்பல் அதிகரிக்கும்.
- மறுபுறம் டொலரின் ரூபா விலை குறையும்போது டொலரின் நிரம்பல் சார்பளவில் இலாபம் அற்றதாக மாறுவதால் டொலரின் நிரம்பல் குறையும் இதன்படி டொலரின் நிரம்பல் வளையி மேல் நோக்கி சரிந்து செல்லும்.

(02 புள்ளிகள்)

9.

i.

- பொருளாதார அபிவிருத்திக்கும் பேண்தகு அபிவிருத்திக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுவதுடன் அவற்றுக்கு இடையில் முரண்பாட்டுத் தன்மையையும் காண முடியும்.
- பொருளாதார அபிவிருத்தியானது பரந்த ஒரு எண்ணக்கருவாகும். அதன் மூலம் ஒரு நாட்டின் வெளியேற்றின் தொகை ரீதியான பண்பு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் உள்ளடக்கப்படும். பொருளாதார வளர்ச்சிக்கு மேல் அதிகமாக சிறந்த வாழ்க்கை தரத்தை உருவாக்கி தேவையான மாறிகள் பலவற்றின் எதிர்க் கனிய மாற்றங்கள் பொருளாதார அபிவிருத்தியில் உள்ளடக்கப்படும்.
- மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் பொருளாதார வளர்ச்சி பொருளாதாரத்தில் கட்டமைப்பு மாற்றங்கள் சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சி சுற்றாடல் தன்மைகள் சுகாதார நிலை மற்றும் ஆயுள் எதிர்பார்க்கை உயர்வு போன்ற பல்வேறு விடயங்கள் பொருளாதார அபிவிருத்தியில் உள்ளடங்கும்.

(02 புள்ளிகள்)

- பேண்தகு அபிவிருத்தி என்பது எதிர்கால மக்களின் தேவைக்கான வளங்களை மீதப்படுத்தி சுற்றாடலுக்கு பாதுகாப்பான விதத்தில் நிகழ்கால சனத்தொகைகளில் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் செயற்பாடாகும். வேறு வகையில் கூறுவதாயின் எதிர்கால சந்ததியினர் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றலை விட்டுக் கொடுக்காத வகையில் நிகழ்கால சந்ததியின் தேவைகளை பூர்த்தி செய்யும் செயல் முறையாகும்.
- பேண்தகு அபிவிருத்தியின் போது பொருளாதாரம் சமூகம் மற்றும் சுற்றாடல் ஆகிய மூன்று துறைகளினதும் ஒருங்கிணைப்பில் மூன்றும் சமமான விதத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யப்படுமாயின் ஒரு துறையானது மற்றைய துறையின் மீது நேர்க்கணிய செல்வாக்கு செலுத்தி மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் அதே வேலை

இவற்றுக்கிடையில் சமநிலை அற்ற தன்மை ஏற்படுமாயின் நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியின் வாழ்க்கைத் தரம் துர்பாக்கியமான ஒரு நிலைக்கு தள்ளப்படும்.

(02 புள்ளிகள்)

ii. மனித அபிவிருத்தி சுட்டெண்ணின் நன்மைகள்

- அபிவிருத்தியை அளவிடுவதில் அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த பரிமாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான அளவு கோள்கள் மனித அபிவிருத்தி சுட்டென்னை உருவாக்குவதில் உள்ளடக்கப்படுகின்றன.
- அபிவிருத்தியில் உள்ளீடு செய்யும் தரப்பினர் (கல்வி மற்றும் சுகாதார நிலை) போன்றே அபிவிருத்தியில் வெளியீட்டு தரப்பினரின் (சிறு நில வாழ்க்கைத் தரம்) அளவுகோள்களும் பயன்படுத்தப்பட்டு மனித அபிவிருத்திச் சுட்டென் உருவாக்கப்படுகிறது.
- பொருளாதார முன்னேற்றம் மற்றும் மனித நலன் ஆகிய இரு துறைகளும் சேர்ந்து மதிப்பீடு செய்யப்படக் கூடிய விதத்தில் சுட்டென் உருவாக்கப்பட்டுள்ளது.
- 193 நாடுகளுக்கும் வெவ்வேறாக சுட்டெண்கள் உருவாக்கப்பட்டுள்ளதால் சுட்டெண்ணின் பெருமானத்திற்கேற்ப நாடுகளின் மனித அபிவிருத்தி மட்டங்களை வகைப்படுத்த முடிவதுடன் மதிப்பீடு செய்யவும் முடியும்.

மனித அபிவிருத்தி சுட்டனின் குறைபாடுகள்

- மனித அபிவிருத்தி சுட்டென் என்பது ஒரு முழுமையான குறிக்காட்டியாகையால் நாட்டின் உள்ளே காணப்படும் துறை ரீதியான பிரதேச ரீதியான மக்களின் இனரீதியில் நிலவும் அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகளை இச் சுட்டெண்ணால் வெளிப்படுத்தப்படுவதில்லை.
- மனித அபிவிருத்தியின் எல்லா பரிமாணங்களையும் மனித அபிவிருத்திச் சுட்டெண் வெளிப்படுத்துவதில்லை உதாரணமாக அரசியல் சுதந்திரம் மனித பாதுகாப்பு
- சுட்டெண்ணில் உள்ளடக்கப்படும் பிரதானமாரிகள் மூன்றிற்கும் ஒரே அளவான நிறையிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை இது நடைமுறை பொருளாதார மற்றது என ஆய்வாளர்கள் விமர்சிக்கின்றனர்.
- அபிவிருத்தி என்பதன் மூலம் பரந்தளவில் கருதப்படுவது யாதெனில் சமூகத்தின் அத்தியாவசிய தேவைகளில் இருந்து விடுபடுவதாகும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் இக்குறிக்கோளை திருப்திகரமாக அளவிட முடியாது.
- வருமான பரம்பல் பற்றிய எந்த ஒரு கரிசனையும் இச்சுட்டெண்ணில் காண முடியாது.
- பண்பு ரீதியான மாற்றங்கள் குறித்து இச்சூட்டின்னில் கருத்தில் கொள்ளப்படவில்லை. பாடசாலை கல்வியில் ஈடுபடும் மாணவர் எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்பட்ட போதிலும் பாடசாலை இடைவிலகலில் பாடசாலையை விட்டு செல்லும் மாணவர் எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படவில்லை.
- அபிவிருத்தியின் மீது செல்வாக்கு செலுத்தும் சுற்றாடல் பரிமாணங்கள் இச்சுட்டெண்ணில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

(ஏதாவது ஒரு விடயத்திற்கு 02 புள்ளிகள்)

iii. அ. வறுமைக்கோடு என்பது உணவு மற்றும் உடை சுகாதாரம் உரையுள் போன்ற உணவல்லாத அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஒரு நபருக்கு ஒரு மாத காலத்திற்கு தேவைப்படும் பணத்தின் அளவாகும். தொகை மதிப்பு புள்ளி விபர திணைக்கள மதிப்பீட்டின்படி 2025 ஏப்ரல் மாதத்தில் இலங்கை வறுமை கோட்டின் பெருமதி 16,342 ரூபாவாகும்.

(01 புள்ளி)

தேசிய வறுமை கோட்டிற்கு கீழுள்ள சனத் தொகையை மொத்த ஜனத்தொகையின் சதவீதமாக கூறுவது சனத்தொகை வறுமை குறிக்காட்டியாகும்.

$$\text{சனத்தொகை வறுமை குறிகாட்டி} = \frac{\text{வறுமை கோட்டின் கீழ் உள்ள சனத்தொகை}}{\text{மொத்த சனத்தொகை}}$$

(01 புள்ளி)

ஆ. கல்வி- பாடசாலை கல்வியில் நுழைவு மற்றும் பாடசாலை செல்லும் வருடங்களின் எண்ணிக்கை

சுகாதாரம்- சிறுவர் மரண வீதமும் சிறுவர் போசனையும்

வாழ்க்கைத் தரம்- மின் இணைப்பு குடிநீர் வளங்கள் கழிவகற்றல் வசதிகள் வீடுகளின் தரநிலை உணவு தயாரிக்க பயன்படும் எரிபொருள் சொத்துக்களின் உரிமை

(சர்வதேச பல் பரிமாண வறுமை சுட்டெனின் மூன்று பரிமாணங்களையும் அதில் உள்ளடக்கப்படும் அம்சங்களையும் குறிப்பிடல்.

(01 புள்ளி)

இலங்கையில் பல்பரிமாண வறுமையை அளவிட இரு சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- சர்வதேச பல் பரிமாண வறுமை சுட்டென் இதனை (UNDP)உருவாக்குகிறது.
- தேசிய பல் பரிமாண வறுமை சுட்டென் இதனை (DCS)உருவாக்குகிறது.

(01 புள்ளி)

iv.

- இலங்கையில் 2024 ஆம் ஆண்டில் தொழிற்படையில் பங்கு கொள்ளல் வீதம் 47.4மூ ஆகும். இதனால் கருதப்படுவது என்னவெனில் 15 வயதுக்கு மேற்பட்ட சலத் தொகையில் தொழிற்படையில் உள்ளடக்கப்படுவது 47.4மூ என்பதாகும்.
- தொழில் புரியக்கூடிய வயது பிரிவினர் சுமார் 17.5 மில்லியன் பேர் இருந்த போதிலும் தொழில் படையில் உள்ளடக்கப்படுவது 8.3 மில்லியன் பேர் மாத்திரம் ஆகும். சுமார் மில்லியன் பேர் தொழில் படையில் உள்ளடக்கப்படுவதில்லை இப்பிடிவினரில் முழு நேர மாணவர்கள் வீட்டுத் தலைவிகள் மதகுருமார்கள் ஊனமுற்றோர் ஓய்வு பெற்றோர் போன்ற குழுக்கள் உள்ளடக்கப்படுவர்.
- இலங்கையில் தொழிற்படையின் பங்கு கொள்ள வீதம் 50 சதவீதத்தை விட குறைவாக இருப்பதனால் உடனடியாக அவதானிக்கப்படக்கூடிய விடயம் யாதெனில் தொழில் புரியக்கூடிய வயது பிரிவினரில் பெரும்பான்மையானோர் பொருளாதார ரீதியில் செயலற்று இருப்பதாகும். இந்நிலைமைக்கு பிரதான காரணியாக அமைவது குடும்ப பொறுப்புக்களை ஏற்று நடப்பதற்காக பெண்கள் தொழிற்படையிலிருந்து விலகுவதாகும். பெண்களின் தொழிற்படையில் பங்குப்பற்றல் வீதம் 31% என்னும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை இம்முடிவை நிரூபிக்கின்றது.
- குடும்பத்தில் பெண்களின் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் சமமற்ற முறையில் அவர்கள் மீது சுமத்தப்படுவது மனித மூலதனம் என்ற வகையில் பெண்கள் உயர்திறன்களை பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டாமல் பெண்களின் சம்பளங்கள் மற்றும் பதவி உயர்வுகள் குறைந்தபட்ச கவனத்திற்கு உட்பட பெண்களின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய சமூகத்தின் எண்ணப்பாடுகள் தொழில் புரியும் சூழல் பாதுகாப்பாகவும் வினைத்திறனான போக்குவரத்து வசதிகள் போதிய அளவில் கிடைக்காமை போன்ற காரணங்கள் பெண்களின் தொழில்படையின் குறைந்த பங்கு பெற்றோருக்கு ஏதுவாகியுள்ளன.
- இந்த நிலைமை பொருளாதாரத்தின் சாத்திய உற்பத்தி இயலுமையை பாதிக்கிறது. அது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வேகத்தை கீழ் மட்டத்திற்கு கொண்டு வரலாம். இதன் மூலம் குடும்பங்களின் வறுமை நிலை அதிகரிக்கலாம். பெண்களின் தொழிற்படை பங்கு கொள்ளல் வீதம் குறைவாக உள்ளமை வயோதிப பெண்களின் பாதுகாப்பின்மைக்கும் காரணமாகலாம்.

(04 புள்ளிகள்)

v. முதியோர் சனத்தொகை இனருக்கான சமூக பாதுகாப்பு வலைப்பின்னல்கள்

- அரசு சேவையாளருக்கான ஓய்வூதிய முறை
- விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டம்
- அரசு சேவையாளர் ஊழியர் சேம லாப நிதியம்
- ஊழியர் நம்பிக்கை நிதியம்
- அக்ரகார சுகாதாரக் காப்புறுதி
- சேமலாப நிதியம்
- சமுர்த்தி அல்லது அஸ்வேசும செத்திட்டம்
- சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவு
- ஊனமுற்றோருக்கான உதவித்தொகை
- சிரேஷ்டபிரஜைகளுக்கான விசேட வட்டிக் கொடுப்பனவு

(நான்கு விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

உலகின் சில நாடுகளைப் போன்று இலங்கையிலும் எதிர் நோக்கப்படும் குடித்தொகை நிலை மாற்று பிரஷேதமானதாகும் சனத்தொகை முப்படைதல் மூப்படைந்த சனத்தொகை பொருளாதார ரீதியில் செயலற்றதாக மாறுதல் ஏனைய நாடுகளை விட இலங்கையில் மிகத்தீவிரமான ஒரு நிலையில் இருப்பதை காண முடிகிறது.

ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மத்தியில் இலங்கை அதிகளவு முப்படைந்த சனத்தொகையைக் கொண்ட நாடாக மாறியுள்ளது இக்குடித்தொகை மாற்றம் காரணமாக சமூக பாதுகாப்பு வலை பின்னலின் மீது ஏற்படுத்தக்கூடிய சவால்கள் பின்வருமாறு

முப்படைந்த ஜனத்தொகையை பாதுகாப்பதற்கு தற்போது காணப்படும் சேமிப்பு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள் மற்றும் நிறுவன ரீதியில் பங்களிப்புகள் போதுமானதாக இல்லை.

அரசாங்க ஓய்வூதிய முறைமையை நீண்ட காலத்திற்கு கொண்டு செல்லும் இயலுமை மீது ஏற்படக்கூடிய சவால்கள் (அதி கூடிய அரச கடன் சுமை)

தனியார் துறையின் ஊழியர்களின் பாதுகாப்புக்கான ஊழியர் சேமலாப நிதியின் மூலம் ஓய்வு பெற்ற அங்கத்தவர்களுக்கு போதிய அளவு பாதுகாப்பு கிடைக்குமா என்ற சந்தேகம் நிலவுகின்றமை.

சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவை பெரும் நபர்களின் எண்ணிக்கை 40000 ஆக இருப்பினும் இதைவிட மிகப்பெரிய எண்ணிக்கையானோர் அவ் உதவி தொகையை பெரும் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

(02 புள்ளிகள்)

10.

i. புருணை கம்போடியா இந்தோனேசியா லாவோஸ் மலேசியா மியான்மார் பிலிப்பைன்ஸ் சிங்கப்பூர் தாய்லாந்து வியட் நாம் சீனா ஜப்பான் ஆஸ்திரேலியா நியூசிலாந்து தென்கொரியா

(ஏதேனும் நான்கு நாடுகளுக்கு 04 புள்ளிகள்)

ii.

- போட்டித் தன்மையை அதிகரிப்பதற்காக தேசிய பொருளாதாரத்தை பன்முகப்படுத்தல்
- 2030 ஆம் ஆண்டு ஆகும் போது கார்பன் வெளியேற்றத்தை பூச்சியம் ஆக்குதல்.
- உலகப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைந்து செயல்படல்.
- பேரின பொருளாதார உறுதி நிலை மற்றும் கடன் பேன் தகுத்தன்மையை அடைதல்
- விவசாயிகளின் விலை திறன்வசாயி வருமானங்கள் மற்றும் விவசாய விலை பொருள் ஏற்றுமதியை அதிகரித்தல் என்பவற்றுக்காக விவசாய துறையை நவீன மயப்படுத்தல்.
- மொத்த பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்தை ஊக்குவித்தல்.
- வெளிநாட்டு நேரடி முதலீட்டை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% மட்டத்திற்கு உயர்த்துதல்.
- 2030ல் பொருள்கள் சேவைகளின் ஏற்றுமதிகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 40% மட்டத்திலும் 2040 இல் 60% மட்டத்திற்கும் கொண்டு வருதல்.
- வலுவான ஒரு முதலீட்டு சூழலை உருவாக்கி முன் கொண்டு செல்லல் நிலைத்த தன்மை கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் முதலீட்டு வளையங்களுக்கான தேவைப்பாட்டை மதிப்பிட்டு அவற்றை உருவாக்குவதற்காக ஒரு பொருளாதார ஆணைக்குழுவை உருவாக்கல்.
- வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவித்தல் அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குவதற்காக வெளிநாட்டு வர்த்தகத்திற்கான ஒரு காரியாலயத்தை ஏற்படுத்தல்.
- தேசிய உற்பத்தி திறன் ஆணைக் குழுவை அமைத்தல்.
- 2027 ஆகும்போது பொருளாதார வளர்ச்சியை 5 சதவீதமாக அதிகரித்தல்.
- 2025 இல் வேலை இன்மையை 5 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் பேணல்.
- 2030 ஆம் ஆண்டு ஆகும்போது பெண்களின் தொழிற்படையில் பங்குப்பற்றல் வீதத்தை 40மூ வரையிலும் 2050 ஆம் ஆண்டு ஆகும்போது 50 சதவீதம் வரையிலும் அதிகரித்தல்.

(ஒரு விடயத்துக்கு 01 புள்ளி)

(ஐந்து விடயங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)

iii.

- 2024 ஆம் ஆண்டுக்கான உலக வங்கியின் வகைப்படுத்தலின்படி ஒரு அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவதற்கு வருடாந்த தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் 14005 அமெரிக்க தோழர்களாகவோ அதற்கு கூடுதலாகவோ இருக்க வேண்டும்.
- 2045 ஆண்டு ஆகும்போது இந்நியளவு குறைந்தபட்சம் 19000 ஐக்கிய அமெரிக்க டாலராக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
- சனத்தொகை எரியங்களின்படி 2048 ஆம் ஆண்டாகும்போது இலங்கையின் சனத்தொகை 22 தொடக்கம் 25 மில்லியன் ஆக இருக்கும் அவ்வாறாயின் 19000 அமெரிக்க டாலர்கள் தலா வருமானத்தை இலக்காகக் கொள்வதாயின் இலங்கையின் தலா வருமானம் 418 தொடக்கம் 475 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்க வேண்டும்.
- 2023 இலங்கையின் மொத்த தேசிய வருமானம் பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த அதே வேலை 2028 இல் அது 94 பில்லியன் வரை அதிகரிக்கும் என சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது. அவ்வாறு நிகழ்ந்தால் 2048 ஆம் ஆண்டு ஆகும்போது 418 தொடக்கம் 475 பில்லியன் வரையான இலக்கை அடைய வேண்டுமாயின் இலங்கையின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் எட்டு சதவீதம் வரை அதிகரிக்க வேண்டும்.
- 1968,1978,2001,2011,2012 ஆகிய ஐந்து ஆண்டுகள் நீங்களாக எல்லா வருடங்களிலும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் எட்டு சதவீதத்தை விட குறைவாகவே இருந்துள்ளது எதிர்வரும் 25 ஆண்டுகளில் இதனை இரு மடங்காக அதிகரிப்பது மிகப்பெரிய சவாலாகும்.
- அவ்வாறாயின் பொருத்தமான பொருளாதாரக் கொள்கைகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் மூலம் அது அடையக்கூடிய இலக்காக மாறலாம்.

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி ஐந்து விடயங்களுக்கு 05 புள்ளிகள்)

iv.

- அரசாங்க வருவாய்களை 15 சதவீதம் வரையில் அதிகரித்து அதன் பின்னர் காலப்போக்கில் அதனை மேலும் அதிகரித்தல்.
- அரசாங்க செலவிட்டை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20 சதவீத மட்டத்தில் பேணி செல்லல்.
- 2025 ஆண்டிலும் அதன் பின்னரும் அரசாங்க பாடிட்டு குறை நிலையில் பெறுமதியை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5மூ மட்டத்திற்கு கொண்டு வருதல்.
- பொது படுகடன் அளவிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதம் மொத்த நிதி தேவைப்பாடு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை செலுத்தல்கள் என்பவற்றை ஐஆகு இனால் விதந்துரைக்கப்பட்ட பெருமதிகளில் பேணி செல்லல்.

(மூன்று விடயங்களுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 06 புள்ளிகள்)